REGD 4642 M

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

விபரம்
—
7,
380

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 5—2—50 | இதழ் 32

அதுவல்ல முக்கியம்!

கேள்வி

ஐரோப்பா முழுவதையும் விட அதிகமான ஜனத்தொகையையும் பலவித வேறுபாடுகளையும் கொண்ட தங்கள் தேசத்துக்கு ஒரு அரசியல் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் தயாரித்துவிட்டனர்.........ஐரோப்பாவில் காண முடியாத ராஜதந்திர திறமை இந்தியாவில் இருக்கிறது என தீர்மானிக்கலாமா?

பதில்

அவ்விதம் தீர்மானிக்க முடியாது. அனுஷ்டான சாத்தியமற்ற கற்பனை உலக அரசியல் திட்டத்தை சாதாரண கற்பனைப் பித்தன்கூட தயாரித்துவிட முடியும். சுவர்க்க சாம்ராஜ்யத்துக்கோ, பூலோக சாம்ராஜ்யத்துக்கோ எதற்கு வேண்டுமானாலும் அரசியல் திட்டத்தை அவன் தயாரித்து விடுவான். ஆகவே முக்கிய விஷயம் அதுவல்ல.

இந்திய அரசியலமைப்பு பற்றி கேட்ட கேள்விக்கு ஆங்கிலப் பேராசிரியர் பெர்னட்ஷா அளித்தபதில் இது!

மத்தியவகுப்பு—ஒரு மகத்தான சக்தி

[வாணன்]

"அவன் ஒரு குமாஸ்தா! மாதச் சம்பளம் நூறுரூபாய். காலையில் பத்துமணிக்கு ஆபிசுக்குச் சென்றால் மாலை ஆறுமணிக்குத்தான் வீடு திரும்புவான். பல நாட்களில் இரவு எட்டு மணிகூட ஆகிவிடும். அவனுடைய வாழ்க்கை கடனுடன் ஆரம்பிக்கப்பட்டது. கிடைத்து வந்த ஊதியம் வாய்க்கும் கைக்கும் கிட்டியதே பெரிய அதிசயம். ஆகவே தான் அவனுடைய 'இன்ப வாழ்க்கை' — திருமண வாழ்க்கை ஆரம்பமானபோது அவன் பட்ட கடன் ஓராயிரம் ரூபாய்கள். இந்த கடனை அடைத்து, வரும் ஊதியத்தை வாழ்க்கை நலனுக்குச் செலவிட ஆரம்பிக்கும் முன்னமேயே, அவன் குடும்பம் பெருகிவிட்டது. வயோதிகத்தந்தை, தாய், ஆசை நாயகி இதோடு அரைடஜன் குழந்தைகள்! இத்தனைப் பெரிய குடும்பத்தை அவன் பராமரிக்கவேண்டி நேரிட்டது. அவன் குடும்பம் பெருகியதுபோல் அவன் வருவாய் பெருகவில்லை. இருபத்திநான்குமணி நேரமும் வேலை செய்தால்கூட அவனுக்கு சம்பளம் போதாமல்தானிருந்தது பட்டகடனை தீர்ப்பதற்கும், மனைவியின் ஆஸ்பத்திரி செலவுக்கும், தந்தையிறந்த பிறகு ஈமக்கிரியையில் ஏற்பட்ட செலவுக்கும் அவன் கடன் வாங்கிதான் தீரவேண்டியிருந்தது. ஒருகடனை அடைப்பதற்குள் மற்றொரு பெரிய செலவு அவனிடம் வந்து கொண்டிருந்தது.

சமுதாயத்திலே அவன் நிலையோ விசித்திரமானது. உறவினர்கள் வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு அவன், பணப்பையில் கைவிட வேண்டியிருந்தது. நண்பர்களின் கூட்டத்தில அவன் ரூபாய்கள் உருண்டோட வேண்டியிருந்தது. விழாக்களும், நல்ல நாட்களும் அவனுடைய பணப்பையை பரிசோதித்த வண்ணமிருந்தன. வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு செலவு ஏறிய வண்ணமிருந்தது. ஒரு கைக்குழந்தை; அதற்காக அவன் மாதம் முப்பது ரூபாய் செலவிட்டான். இல்லாவிட்டால் குழந்தை பிழைக்காது என்று டாக்டர் கூறினார்.

காலமானியில தட்பவெட்ப நிலைக்கேற்பாசம் ஏறுவது மாதிரி அவன் கடன் ஏறிய வண்ணமிருந்தது. ஒரு கடனை தீர்ப்பதற்குள் இன்னொரு பெரிய கடன் அவன் முன்னிலையில நின்றது. கடனிலேயே மூழ்கிவிட்டான். அவனுடைய வாழ்க்கையே துன்பக் களஞ்சியமாகிவிட்டது.

ஆனால் அவன் இன்பத்தைப் பற்றி அறியாதவனில்லை. வாழ்க்கையின் சுவைகளைப் பற்றி அவன் படித்த ஏடுகள் பல. அவன் கலித்தொகையும், அகநானூறும் ஐங்குறுநூறும் பயின்றவன். அவனுடைய நினைவில ரோமியோவும் ஜூலியட்டும் தான் இருந்து வந்தனர். ஆனால் இன்றோ.........?

தலைக்குமேல் கடன். இரண்டு பேருக்குக்கூட போதாத வருவாய், இந்த நிலையில் அவன் கடனிலிருந்து மீறுவது எப்படி? அவனுக்கு புதையலா கிடைக்கும்? அவன் கிழிந்துபோன சட்டையும் நைந்துபோன அங்கியும் மாறுவது எப்போது? அவன் வரண்ட தலைகளில் எண்ணெய் எப்பொழுது படுவது? இல்லை, அவன் மனைவியும் குழந்தைகளும் வயிறார என்று உண்பது?

இவைகளை நினைத்து, நினைத்து ஏங்கினான். ஏக்கத்திலேயே இந்த உலகத்தைவிட்டே போய்விட்டான்!

துக்கம் கொண்டாடுவதில் மாத்திரம் ஊரில் உள்ள உறவினர் அவ்வளவுபேரும் அக்கரை காட்டினர். ஆனால் மறுநாள் கடன்காரர்கள் வந்து தொல்லை கொடுத்தபோது அவன் குடும்பத்தை கவனிப்பவர் யாருமில்லை. இருந்தவீடும் பட்ட கடனுக்காக அபகரிக்கப்பட்டது.

கண்ணீரும் கம்பலையுமாக குழந்தைகளுடன் வீட்டைவிட்டு புறப்பட்டாள் அவன் மனைவி எங்கே சென்றாள் என்று யாருக்கும் தெரியாது. அவளைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. ஒரு குமாஸ்தாவின் குடும்பம் குழிதோண்டி புதைக்கப் பெற்றது!"

பொருளாதாரத் துறைப்படி நா
டில் வாழும் மக்கள் கூட்டத்
மூன்று பிரிவாக பிரிக்கலாம். "உ
தர வகுப்பு, மத்தியதர வகுப்
கீழ்த்தர வகுப்பு." என்ற பிரிவுக

தொழில் முதலாளிகள், வட்டிக்
பணம் கொடுத்து வாங்கும் பாங்
கள், நிலச்சுவான்தார்கள், அதிகா
தின் உச்சியிலமர்ந்து அதிகம
அளவுக்கு ஊதியம் பெறும் உத்
யோகஸ்தர்கள், மற்றும் பல வழிக
லும் சாதாரண குடும்பசெலவுக்கு
மேல், லாபம் பெறக்கூடிய வகை
சம்பாதிக்கும் அவ்வளவு பேரு
உயர்தர வகுப்பை சேர்ந்தவர்க
இவர்களுடைய மாத வருமான
மாதச் செலவைவிட பல மட
மேலேயே யிருக்கும். வாழ்க்கை
மாசு மருவின்றி டாம்பிகத்துட
அனுபவிப்பவர்கள். பொருளாதா
துறையில் ஏற்படும் நெருக்கடிகளோ
ஏற்றத் தாழ்வுகளோ இவர்க
பாதிக்காது. சென்ற வருஷத்
அமித லாபம் இந்த வருஷத்
நஷ்டத்தை ஈடுகட்டும். துன்பமு
கும் இவர்களுக்கும் வெகுதூ
அவர்கள் இருக்கும் பக்கம் வற
எட்டிப் பார்க்காது.

இவர்களுக்கு நேர் எதிரான
கள் கீழ்த்தர வகுப்பினர். அன்
டம் அவர்கள் உழைத்தே, வருவ
தேடவேண்டும். அவர்களுக்
உழைப்பே மூலதனம். பல நே
களில் அந்த உழைப்புக்குக்
மதிப்பு இராது! மழை சரிய
சமயத்தில் பொழியாவிட்டால், வ
காய்ந்தால், உழவனுடைய உழைப்
தேவையில்லை. அதன் பலன் ப
லட்சம் உழவர்களுக்கு வேலையில்

தொழிற்சாலைக்கு தேவையா
கச்சாப் பொருள்கள் கிடைக்கவில்
என்றால் அந்த ஆண்டில் தொழிலா
யினுடைய உழைப்புக்குமதிப்புகி
யாது. அவனுடைய தொழில் திற
காலணா சம்பாதித்து தராது. இ
முறையில்தான் கீழ்த்தர வகுப்பை
சேர்ந்த ஒவ்வொருவனுடைய வா
கையும். அரைவயிற்றுக் கஞ்
அதுவும்கூட சில நேரங்களி
கிடைக்காது. எழுத்தறிவில்

, ஒண்ட ஒதுங்க சுகாதாரமற்ற
சைகூட கிடையாது. வாழ்க்கை
ர்களுக்கு பெரிய சுமை! அறியா
யும் உயர்தர வகுப்பாரின் ஆண
ம் அந்த வகுப்பையே தீண்டா
ர்களாகவும், சமுதாயத்தில் ஜாதி
தாழ்ந்தவர்களாகவும் செய்து
ட்டது. பொருளாதாரம், மதம்
ண்டும் ஒதுக்கித் தள்ளிய இவர்
துன்பபுரியிலேயே வசிக்கின்ற
. இவர்களுக்கு 'இன்பபுரி' என்
என்னவென்று தெரியாது.
சமயம் ஓரிருவருக்கு தெரிந்
லும் தாங்களும் இன்பபுரியில்
க்க வேண்டியவர்கள் என்பது
ரியாது. அந்த அளவுக்கு சிந்
செல்லாது. அப்படி செல்ல
ாமல் பார்த்துக்கொள்ளத்தான்
ர்தர வகுப்பார் அரசாங்கத்தை
த்துக்கொண்டிருக்கிறார்களே!

மாடிக்கும், மண்ணிற்குமிடையே
ள தளம்போல இந்த இரண்டிற்
இடைப்பட்ட வகுப்பார்தான்
தியதரவகுப்பார். இவர்களைப்
ி அதிகம் விளக்கத்தேவை
லை. ஏனென்றால் நாட்டிலே
வர்கள்தான் அதிகம். சர்க்
அலுவலகங்கள், ஆலை
நடத்தும் பணியிலிருப்பவர்
, மற்றும் குமாஸ்தா வேலை செய்
அவ்வளவு பேரும் இந்த மத்திய
க் கூட்டம்தான். காலை 9 மணிக்கு
பில் பகலுணவை சுருட்டிவைத்
கொண்டு பஸ்ஸுக்காக காத்
கொண்டிருப்பவர்கள் இந்த மத்
தரக் கூட்டம்தான். மாலையில்
லை தோய்ந்த முகத்துடன்
த்த உடலுடன் அழுக்கேறிய
டையுடன் கையில் கத்தை காகி
கட்டுகளை தூக்கிக்கொண்டு
ல்லும் பரிதாபப் பிராணிகள்
வ்வளவு பேரும் இந்த மத்திய
் கூட்டம்தான்.

சமூகத்திலே இவர்கள் நிலைதான்
த்திரமானது. பொதுவாக மத்
தர வகுப்பு படித்த மக்களின்
ருப்புதான். தங்களுடைய உட
ழைப்பால் பிழைக்காமல் அறிவித்
லைல் பிழைக்கும் கூட்டமாதலால்
தியதர வகுப்பில்தான் அறிவாளி
உள்ளனர். உலகச் சரித்தி
தை உணர்ந்தவர்கள். வாழ்க்
யின் சுவையை அறிந்தவர்கள்.
பபுரியின் இருப்பிடத்தை
ிந்தவர்கள். ஓரிரு சமயங்கள் சென்றுகூட வந்திருப்பார்கள். ஆனால் இவர்களுக்கு கிடைக்கும் வருவாயோ மிகச் சொற்பம். சமுதாயத்தில் உண்டாயிருக்கும் அமைப்பு இந்த மத்தியதர வகுப்பை உயர்தர வகுப்பைப்போல் வாழ வேண்டுகிறது. ஆனால் மத்தியதர வகுப்பின் வருவாய் அவர்களை கீழ்த்தர வகுப்போடு சேரச் சொல்கிறது. இந்த இரு எதிர் சக்திகளுக்கு இடையில் அவர்கள் அவதியுறுகிறார்கள். இன்பபுரியின் இருப்பிடத்தை அறிந்த காரணத்தினால் ஆசை அவர்களை அந்தபுரிக்கு அழைக்கிறது. ஆனால் வருமானமோ துன்பபுரிக்குத் தள்ளிச் செல்கிறது.

இரண்டுபிரிவுகளுக்கும் இடையில் அவதிப்படும் மத்தியதர வகுப்பை 'வெளவால் கூட்டம்' என்றுதான் கூறவேண்டும். இந்த வெளவால் கூட்டத்தின் முடிவு நாம் ஆரம்பத்தில் எடுத்துக்காட்டியபடி அழிந்துகொண்டே இருக்கிறது. நாட்டில் பெரும்பாலான குமஸ்தா குடும்பங்கள் அழிந்துகொண்டேயிருக்கிறது. நடுத்தர வகுப்பு குழிதோண்டி புதைக்கப்படுகிறது.

இந்திய உபகண்டத்தில் உயர் வகுப்பின் நிலையைப்பற்றி சரிவர புரிந்துகொள்ள எண்ணற்ற புள்ளி விபரங்கள் நமக்கு சுலபமாக கிடைக்கின்றன ஆண்டுதோறும் ஒவ்வொரு வகையான தொழில்களில் லாபம் எவ்வளவு? எத்தனை முதலாளிகள் இதைப் பங்கிட்டுக்கொள்கின்றனர். வியாபாரத்தில்வியாபாரிகள் போட்ட மூலதனம் எவ்வளவு? அவர்கள் அடைந்த பலன் எத்தனை கோடிகள்? இவைகளுக்கு கணக்கு விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதேமாதிரி கீழ்தர வகுப்பின் ஏழ்மைக்கும் ஓரளவுக்கு புள்ளி விபரங்கள் உண்டு. ஆனால் இந்த மத்திய வகுப்புக்கு இதுவரையில் ஒரு குறிப்பிட்ட முறையில் புள்ளி விபரங்கள சேகரிக்கப்படவில்லை. சமீபத்தில்தான் இந்த விஷயத்தைக் குறித்து அக்கரை காண்பிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர் இந்திய உபகண்டத்தின் மத்திய வகுப்பின் நிலையைப் பற்றி முன்னூறு பக்கங்கள்கொண்ட ஆராய்ச்சியுரை ஒன்றை தயார் செய்து வெளியிட்டுள்ளார். அதில் மத்திய வகுப்பின் நிலை ஓரளவுக்கு விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் இதுவே முதல் ஆராய்ச்சியுரை ஆதலால் அந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவைகளை வைத்துக்கொண்டு இந்திய உபகண்டத்தின் மத்திய வகுப்பைப் பற்றி ஆராயலாம்.

பொருளாதார ஆலோசகர் தன்னுடைய ஆராய்ச்சிக்கென ரூ. 500 வரை வாங்கும் ஆயிரக்கணக்கான சர்க்கார் ஊழியர்கள் பலருடைய மாதாந்திர செலவுகளை கவனித்து தன்னுடைய ஆராய்ச்சி யுரையை வழங்கியுள்ளார்.

பொதுவாக மத்திய வகுப்பினரில் நாளாவட்டத்தில் 'கூட்டுக்குடும்பம்' என்ற முறை குறைந்துகொண்டே வருகிறது. கூடியவரைக்கும் கணவன், மனைவி, குழந்தைகள் இவர்கள்

ஏதாவது ஒரு மாறுதலைச் செய்ய உத்தேசித்தால் அல்லது அந்த மாறுதல் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அல்லது சில சுயநலமிகளுக்கு அம்மாறுதலால் இடையூறு ஏற்படுமானால் உடனே சில நபர்களும் சங்கங்களும் ஒரு கூச்சலை எழுப்புவது வழக்கம். "இந்து கலாச்சாரத்துக்கு ஆபத்து" என்பதே அந்த கூக்குரல். பய உணர்ச்சியைத் தூண்டிவிட்டு வைதீக சக்திகளை ஒன்றுபடுத்தும் வழி அது. இத்தகைய ஆசாமிகள் சதி உடன்கட்டை ஏறுவதை ஒழிக்கும் ஏற்பாட்டைக் கூட ஆட்சேபித்தனர். ஆனால் ஜீவனுள்ள சமூகத்தில் மாறுதலின் அவசியத்தையும் சக்தியையும் இவர்கள் உணர்வதில்லை யதார்த்த நிலைமையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க இவர்களுக்கு தைரியம் கிடையாது. நமது சமூகத்தின் ஜீவாதார உறுப்புகளை அரித்து வரும், நாச சக்திகளை எதிர்த்து நிற்க அவர்கள் அஞ்சுகின்றனர். உதாரணமாக இந்து சமூகத்தில் உள்ள வகுப்புவாதத்தையும் தீண்டாமையையும் இந்த ஆசாமிகள் கண்டித்ததே கிடையாது. அத்தகைய நபர்கள் தங்களை இந்து கலாச்சாரத்தின் காவலர்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர்!

R. R. திவாகர்.

தான் ஒருகுடும்பமாக வாழ இன்றைய நிலையில் மத்திய வகுப்பார் விரும்புகின்றனர். கூட்டுக் குடும்பம் என்பது நூறுக்கு நூறாக இருந்த நாட்டில் இத்தகைய மாறுதல் பொருளாதார சீரழிவை நன்றாக காட்டும். இருந்தாலும் இன்னும்கூட தனிக் குடும்பமாக வாழும் (அதாவது கணவன், மனைவி, குழந்தைகள் மாத்திரம்) குடும்பங்கள் நூற்றுக்கு சென்னை மாகாணத்தில் 53% தான், சென்னை நகரத்தில் 60; வங்காளத்தில் 48; கல்கத்தா நகரத்தில் 60; பம்பாயில் 77. இம்மாதிரி கூட்டுக்குடும்பங்கள் அழிந்து தனிக்குடும்பங்கள் ஏற்படுவது மத்திய வகுப்பில் தனிக் குடும்பங்களுக்கு கிடைக்கும் வருவாயின் தன்மையை நன்றாகக் காண்பிக்கிறது. கிடைக்கும் வருவாய் தன் குடும்பத்திற்கே போதாத நேரத்தில் தாய், தந்தை, வயோதிகர்கள் இவர்களை பாதுகாக்க தனி மனிதனால் எப்படி முடியும்?

சாதாரணமாக மத்திய வகுப்பை சேர்ந்தவர்களின் மாத சராசரி வருமானம் சென்னையில் ரூ 159ல் ஆரம்பித்து டெல்லியில் ரூ 286/---வரை செல்கிறது. இந்த வருவாய் கூட தனிக்குடும்பங்களை சேர்ந்த ஒரே நபர் சம்பாதிப்பதுதான். பெண்கள் படிக்கவில்லை. படித்த பெண்கள் தைரியமாக வேலை செய்து சம்பாதித்து குடும்ப பொருளாதாரத்தை சீர் செய்வதுமில்லை. இந்த நிலையில் ஒவ்வொரு குடும்பத்தின் வரவோடு செலவை ஒத்திட்டுப் பார்த்தால் பயங்கரமான புள்ளி விபரங்கள் நமக்கு கிடைக்கிறது.

சென்னையிலும் பம்பாயிலும் ஐந்து குடும்பங்களில் நான்கு குடும்பங்கள் தங்களுடைய வரவுக்குமேல் செலவு செய்கின்றன. ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், மத்திய மாகாணம், ஒரிஸா, முதலிய மாகாணங்களில் நூற்றுக்கு எண்பது குடும்பங்கள் தங்களுடைய வரவைவிட அதிக செலவு செய்கிறது. நூறுக்கு முப்பத்தேழு குடும்பங்களிலிருந்து எழுபத்தி ஐந்து குடும்பங்கள்வரை கடன்பட்ட குடும்பங்களாகவே வெவ்வேறு மாகாணங்களில் மத்தியதர வகுப்பு வாழ்கிறது. ரூ 200-க்கு குறைந்த சம்பளம் வாங்கும் ஒவ்வொரு குடும்பமும் மாதாமாதம் தங்கள் வருவாயில் நூற்றுக்கு 20 பாகம் கடன் வாங்கியவண்ணமிருக்கி... கீழே காட்டியுள்ள புள்ளிவிபரம் இதை தெளிவாக்கும்.

ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலை

பிரதேசம்	சராசரிமாத வருமானம்	மாத செலவு	மாதம் ஏற்படும்கடன்
பம்பாய் நகரம்	253-4	294-10	41-6
பம்பாய் மாகாணம்	183-13	209-13	26-0
சென்னை நகரம்	163-9	194-11	31-2
சென்னை மாகாணம்	159-6	184-11	25-5
கல்கத்தா	229-14	276-3	46-5
வங்காளம்	198-5	239-5	41-5
பீகார், ஒரிஸா	191-9	238-8	46-15
ஐக்கிய மாகாணம்	169-5	209-1	39-12
பஞ்சாப்	234-9	285-14	51-2
மத்திய மாகாணம்	190-5	229-6	39-1
டில்லி	286-1	301-8	15-7

இந்த புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்ட மாதங்கள்: நவம்பர் 19... முதல் ஆகஸ்ட் 1946 வரை.

மேற்கண்ட புள்ளி விபரத்திலிருந்து மத்தியதர வகுப்பு எந்தநிலையிலிருக்கிறது என்பதை நன்றாக தெரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு தூரம் அதிகமான செலவு செய்ய காரணம்தான் என்ன? ஒருவேளை மனிதனுக்கு அடிப்படை தேவைகளான உணவு, உடை, இருக்க இடம் இன்னும் பலதையும் இவர்கள் அனுபவிக்கிறார்களா? அப்படி வேண்டிய உணவும் வாழ இடமுமாவது இவர்களுக்கு கிடைக்கிறதா? அந்தக் கணக்கைப் பார்த்தால் அதுவும் இவர்களுக்கு சரியாகக் கிடைப்பதில்லை.

தனிப்பட்ட மனிதன் ஒருவனுக்கு வேண்டிய குறைந்தபட்ச உணவு அளவை இந்திய அரசாங்கத்தின பங்கீட்டு ஆலோசகர் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து கீழே தருகிறோம்.

ஒருநாளைக்கு, தனி மனிதனொருவனுக்கு தேவையான குறைந்தபட்ச உணவு.

1. மாமிச உணவு
   - பால்—8 (அவுன்ஸ்)
   - முட்டை—2 ,,
   - மாமிசம்—2 ,,
   - நெய்—1 ,,
   - எண்ணெய்ச் சத்து அல்...
   - எண்ணெய்—10 அவுன்ஸ்
2. பருப்பு வகை—2½ ,,
3. அரிசி —10 ,,
   - இத்துடன் ஜவ்வரிசி அல்... கேழ்வரகு 5—,,
4. காய்கறிகள்—3½ ,,
5. பழங்கள் 4 அவுன்சுக்கு

மேலே கொடுக்கப்பட்டுள்ள... கள் குறைந்தபட்ச மனித வ... சிக்கு அத்தியாவசியமான உ... (ஆம், நமக்கு அதில் இரண்ட... சங்கதி ஒருநாளைக்கு கிடைப்ப... அரிதாயிருக்கிறது!)

இதைத் தவிர பெண்களு... பற்பல சமயங்களில் அதிக, குறை... உணவு வகைகளுட், குழந்தை... அவர்கள் வயதுக்கேற்ற உண... இன்னும் அதிகமான வி... உயர்த்தும். சுமாரா விலை மே... டுப் பார்த்தால் கூட மேற்க... பொருள்களின் நிகரவிலைகுறைந்... இரண்டு ரூபாய். தனி மனித... மாதம் ஆறுபத்து ரூபாய்க்கு... உணவு உண்ண வேண்டும். அ... யானால் நலைந்து பேரைக் கொ... நம் குடும்பங்கள் இருக்கும் நிலை...

(13-ம் பக்கம் பார்க்க)

★ வெற்றி விழா ★ இரு மாநாடுகள் ★

ஜனவரி 21, 22-ந் தேதிகள்! சென்னை திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலே இடம் பெற்ற நாட்கள்! இளம் இதயங்களின் எக்காளம், எழுச்சி யுலகின் அணிவகுப்பு, எங்கு நோக்கினும் மக்கள் கூட்டம்!

சுட்டு பொசுக்கினும் இமை கொட்டோம், எதுவரினும் இதயம் கலங்கோம், என்ற வீர முழக்கங்கள்! எங்கள் வாழ்வும் வளமும் மங்காது என சங்கை முழங்கு என்ற முரசொலி! 'புலி நிகர் மாந்தர் நாம்; எலிகளல்ல' என்று கூறுவதுபோல, அடைபட்டுக் கிடக்கிறோம் என்பதை உணர்த்துவதுபோல, புலியும் சிங்கமும் அடைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகே கூடினர்—பல்லாயிரக் கணக்கில்!

களிப்பும், குதூகலமும் எங்கு நோக்கினும் கண்களில் பட்டன. மேகம் நிறைந்த வானத்திலே நிலா; சோகம் நிரம்பிய எங்கள் வாழ்வுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்று கூறுவதுபோல டிராம் வண்டிகள், பஸ்கள், எங்கும் உரையாடல்கள்—உணர்ச்சிக் கூத்து, உவகைத் தாண்டவம்!

சென்னை அன்று சிங்கார மயமாக இருந்தது. அருகேயிருக்கும் சமுத்திரத்தை ஒப்புக்கு இழுப்பது போல மக்கள் திரண்டிருந்தனர்—'திராவிடம் எமது நாடு' என்று வீரகர்ஜனை செய்தனர். மாகாணத்தின் அழகுக்கு அழகூட்டும், சென்னை நகரில் நடந்த, இம் மாநாட்டில், பலவகை மக்களும் குழுமினர். கல்லூரி மாணவர்கள், பல்கலை பயின்ற அறிஞர்கள், எக்கட்சியில் இல்லாவிடினும் இலட்சிய ஆசையுடையவர்கள், அதிகாரிகள், ஆர்வம் மிக்கத்தொழிலாளர்த் தோழர்கள், பெண்மணிகள், மாணவிகள் நாகரீக நகரத்தின் மூலை முடுக்குகளிருந்தெல்லாம் வந்து கூடியிருந்தனர். உவகையோடு, உள்ளக் குதூகலத்தோடு!

குக்கிராமம்—வனப்பும் வசதியும் நிறைந்ததல்ல; நாட்டுப்புறம், ரயில் பாதைக்கு அருகில்லாத சிற்றூர்! கண் எழும் புன் மண், கண்ணால் பார்க்கும் பெருவெளி! எனினும் கூடினர், கூட்டம் கூட்டமாக வந்தனர், எண்ணமுடியாத வண்டிகள், காணக் கிடைக்காத உழவர் பெருமக்கள்— தலைநகரில் கூடியதைவிட பன்மடங்கு அதிகமாக, உணர்ச்சியும் எழுச்சியும் முகங்களிலே தோன்ற, வாழ்வு விழா என்னும் இதயக் களிப்போடு திரண்டு வந்தனர்! புதுப் பூரிப்பு, புத்துணர்ச்சி — அவர்களிடையிலே பரவிக்கிடந்தது!

மேலே நிலச்சுடர்மணி வானம், அங்கே நிறையக் குளிர் வெண்ணிலவு, மாலைச் சுடரினில் மூழ்கும் நீல மலைகளின் இன்பக்காட்சி—இதயங்களை எக்களிப்பில் ஆழ்த்தும் கொங்கு நாட்டின், அழகுக் களஞ்சியம் கணியூர்; அன்று, பெண்கள் கொஞ்சிப் பேசிக் கொட்டிடும் ஆர்வ மொழிகள், உழைப்பாளிகள் உவகையுடன் 'வாழ்வளிக்க வந்தவர்களைப் பார்!' என்று கூவிடும் ஆசைச் சொல் நிறைந்து, கிடந்தது! மணற் பரப்புபோல மக்கள் கூட்டம், "மலையை நிகர்க்கும் எங்கள் சக்தி" என்றுணர்த்தும் அவர்கள் ஆர்வத் தொண்டு, காணக் கண் கோடி வேண்டும், கண்டு மகிழ்ந்திட்டால் போதும் என்ற பூரிப்பை அள்ளி, அள்ளி வீசியது!

கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு திராவிடரியக்க வரலாற்றிலே முக்கிய இடம் பெற்றுவிட்டது. கிராமத்திலே, உழைத்து வாழும் உழவர் மத்தியிலே, பாமர மக்களிடத்திலே நமது கொள்கைகள் பரவும் வேகத்தைக் காட்டிவிட்டது! நம் நரம்புகளிலெல்லாம் வீரத்தை, வெற்றிக்களிப்பைத் துடிக்கச் செய்துவிட்டது!

தலைநகரிலே மாநாடு — அது முடிந்த ஒருவாரத்திற்கெல்லாம் கோவைமாவட்டக் கிராமத்திலே மாநாடு! இரண்டு இடங்களில், அதுவும் ஒரு வாரத்துக்குள்! எனினும் அடக்கமுடியாத கூட்டம், தடுக்கமுடியாத பேருணர்ச்சி, தலைவர்களின் அறிவுரைகளைக்கேட்கவேண்டுமென்கிற ஆவல்—நகரில்மட்டுமல்ல, அதை விடப் பன்மடங்கு அதிகமான அளவில் கிராமத்தில்! இரண்டு இடங்களிலும் நடைபெற்ற மாநாடுகள், மாற்றுக்கட்சியினர் பலரிடையில் மாகாணமாநாடுபோலும் என்றஎண்ணத்தை யெழுப்பின — பத்திரிகை நிருபர்களில் சிலர் அதைக்கேட்கவும் கேட்டனர் — அந்த அளவில் மாவட்ட மாநாடுகளிருந்தன!

பொருளற்ற வார்த்தைகளைக் கேட்டு புத்தரும், ஏன் என்றும் புரைபோடிய இதயத்தினர், அங்கு கூடவில்லை! 'வாழ்க' என பேரொலி எழுப்பி, எதற்கென அறியாது, கை தட்டல் எழுப்பும் எண்ணத்தினர் அல்ல அங்கு கூடியவர்கள்! 'உருவற்றுப்போயிற்றே உழைத்து வாழும் எங்கள் வாழ்வு, சிதைவுற்று சிதறுகிறதே எங்கள் சிங்காரமான நன்னாடு' என்ற ஏக்கமும் துக்கமும் எதிரொலிக்க, இருளுக்குள் சித்திரம் தேடும் எண்ணுள்ளமும், வெற்றிச் சிந்தையும்கொண்டவர்கள் கூடினர்! வீரநினைவை நெஞ்சத்திலமர்த்தி வெற்றிப்பண்பாடும் நாள் எந்நாளோ, என்ற வேதனைகொண்டோர் கூடினர்!

* * *

தலைநகரிலே நடைபெற்ற மாநாடு—இரண்டுநாட்கள். நிகழ்ந்தது. இரு நாட்களிலும், திராவிட முன்னேற்றக்கழகத்தின் இலட்சியம், குறிக்கோள், அதையடையும் பாதை ஆகியவைகள் குறித்து முன்னேற்றக்கழக முன்னணிவீரர்கள் — பிரச்சாரப் பீரங்கிகள்—முழக்கினர்! தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டினர், மக்கள் மன்றத்துக்கு உணர்த்தினர்!

தலைமைதாங்கிய சேலம் தோழர் சித்தையன் சிரிப்பிலும் கேலிக்கையிலும் கட்சிவேலைகளைக் கவனிக்கும், சீமானல்ல; வீண் பேச்சும், வெட்டிவேலையும் அவருக்குப் பிடிக்காதவைகள். 'துட்டமனோபாவமும், துடுக்கும் எங்கிருந்தாலும் கிட்டவராதே, செல்!' என்று அதட்டிச் சொல்லும் அஞ்சாப் புலி! ஆர்வச்சிங்கம்! அவரது தலைமையுரை, அறிவுக்களஞ்சியமாகயிருந்தது.

புது அரசியலமைப்பு-பொங்கிவரும் காட்டாறு, நமது உரிமைகளைப் பறக்கடிக்கப், சூறை, நம் வாழ்வைப் பிடுங்கப்பாய்ந்துவரும் நல்ல பாம்பு-என்றும்படையதிர, மக்கள் மன்றம் வீர ஒலி எழுப்ப — குறிப்பிட்டார். சுயமரியாதை இயக்கமுதல், பாடு பட்டுவரும் அந்தப் பாட்டாளித் தோழனின், இருதயத்தில் இத்தனை நாளும் எப்படித்தான் இவ்வளவு அறிவுக்குவியலும்



மறைந்துகிடந்தனவோ, என்று கேட்ட மக்கள் பேசிக்கொண்டனர்! 'தம்பி! இப்போதுதானே காண்கிறாய் முதல் தடவையாக அவரை, ஒரு மாநாட்டின் தலைவராக, என்று கேள்விக்குப் பதில் சொன்னார்,' ஒரு கிழவர்! உண்மைதான் அதுவும்! இயக்கமே எனது மூச்சு என்று இருபது ஆண்டுகளுக்குமேலாகப் பணியாற்றிவரும் இரும்பு இதயத்தார், இலட்சிய வெறியர், சித்தையனின் தலைமையுரையில், நாட்டு வாழ்வை நிர்ணயிக்கும் நற்கருத்துகள் கிடைத்தன.

"தருக்கினால் பிறர் என் சகோதரரைத் தூற்றினால், துயரிழைத்தால்-நான் துள்ளிடும் வேங்கை! புதர்கிடந்த புலி!" என்று கூறுவதுபோல முகத்தில் சாந்தமும், 'உள்ளத்தால் ஒருவன்தான் நான்; எனினும் உடலினால் பலராய்த் தோன்றுவேன்' என்ற வீரம் இதயத்திலும் கொண்ட மதுரைத் தோழர் அழகரடி முத்து தலைநகர மாநாட்டைத்துவக்கிவைத்தார் — அவரது சொற்பொழிவில் வீரமும், எதுவரினும் கலங்கோம் எங்கள் இலட்சியபுரியை அடைந்தே தீருவோம் என்ற உறுதித்தெளிவும் நிறைந்துகிடந்தது.

வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் டி. எம். பார்த்தசாரதி எடுத்த காரியத்தை, இடுக்கண் பலநேர்ந்தாலும் இடையிடையே புயல் வீசினாலும், முடிக்கும் ஆற்றல் படைத்த வீரர். மாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்று முழக்கமிட்ட அவர் "இப்பொழுது மலர்ந்திருப்பது குடியரசு அல்ல. பாசிச அரசு என்று திட்டவட்டமாகத்தெரிகின்றகாரணத்தால்தான் புதிய இந்தியக் குடியரசை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளமுடியாதவர்

களாகிறோம்" என்று வெளியிட்ட வீரங்கலந்த குரலில்!

அஞ்சாநெஞ்சன் அழகிரியின் பிரத்தோற்றமும், அதற்கு எ... "வா, வா" என கைநீட்டி அ... பதுபோல பெருமிதத்துடன்,ப... இருவர்ணக்கொடியும், அலங்க... துடன் போடப்பட்டிருந்த பி... மாண்டமான பந்தலும், அ... குழுமியிருந்த பல்லாயிரக்க... கான மக்களையும் காணும்பொ... "தடைக்கற்கள் உண்டு என்று... தடந்தோள் உண்டு" எத்தனை இ... யூர்கள் எதிர்நோக்கினும் இல... புரியை அடைந்தே தீருவோம்... எண்ணம் எல்லோர் உள்ளத்தி... எதிரொலித்தது. மாநாட்டிலே, இந்திய அரசியலமைப்பைப் ப... முக்கிய தீர்மானம் நிறைவே... பட்டது, திராவிட நாட்டு மக்... அதிருப்திக்குரியது, எங்களைப்... யிடுவது, பாசிசத்தை உருவ... வது இந்த அரசியல் என்... மக்களின் கண்டன முழக்கம் அ... லார்க்கு எடுத்துக் கூறியது.

அரசியலார் நமதியக்க நூல்... கும் நாடகத்திற்கும் அச்சகங்... கும் தடையுத்தரவு பிறப்பிப்... வன்மையாக கண்டித்தும், தெ... களை தேசிய மயமாக்க வே... கோரியும், அமெரிக்க மோகே... ஆட்பட்டு விடாதீர்—டாலர்... பத்யத்திற்கு-இரையாகிவிடாதீ... இந்திய அரசியலாரை எச்சரித்... ஆவடி போர்த் தளவாடக்கி... மூடியதைக் கண்டித்து ... தொடர்ந்து இருக்க வேண்டு... வற்புறுத்தியும், நாட்டு ந... குறித்த பல்வேறுவகைத் தீர்ம... களும் மாநாட்டில் நிறைவே... பெற்றன — மக்களுடைய ... பித்த சம்மதத்தின் பே...

தலைநகரிலே நடை... வர்ணிக்க முடியாத இ... நாட்டின் வெற்றிப் பெ... சென்னைத் தோழர் ... டையதாகும். செயல... கே. கோவிந்தசாமி, எ... இராமன், பொருள... இளையபெருமாள், வி... பா அதிகாரி சி. வி. ... சன் ஆகியோரது கட... பொறுப்பும், கண்ணி... இயக்கத்தை வளர்ச் ...

ம் என்பதிலுள்ள அக்கரையும் மிகப்பாராட்டற்குரியது. மாநாடு முறையில் நடந்தேறுவதற்கு. னி வகுத்து நின்ற ண்டர்களின் சீரிய தொண் சீரிய முறையும் காணக்காண, ளத்திலேகளிப்பும், பெருமகிழ்ச் ம், உண்டாகியது. தொண்டர் த் தலைவர்களாகயிருந்து பணி ழிய சேஷாசலம், கும்பகர்ணன் யோர் என்றென்றும் கவனத் திலிக்ககூடியவர்கள்.

சென்னை மாநாட்டின் இரு நாட் ளும், வழக்கு வாபஸ், கல்சுமந்த ர்' ஆகிய ஓரங்க நாடகங்களும் ரமோகன்' நாடகமும் நடை றது.

முதல் நாள் நடைபெற்ற ஓரங்க கங்களில் நடித்த இயக்கத் ழர்கள்:—

நெடுஞ்செழியன், அன்பழகன், தியழகன், மணிமொழியார், ண்ணபிரான், சி. வி. ராசன், முனுசாமி, முத்து, கண்ணன், ங்கராஜு.

ரங்க நாடகங்கள் இரண்டும் ள் உள்ளத்தைக் கவர்ந்தன. பெரும் மாநாடுகளிலே, இது ற ஓரங்க நாடகங்களை நடத் லே போதும், என்றளவுக்கு த் தோழர்கள் திறமையுடன் தனர். நாடக மேடைக்குப் புதிது என்ற போதிலும், கள் நடிப்பு மக்களால் பாராட் டது.

இரண்டாம் நாள் "சந்திர ன்" நாடகத்தில் வழக்கமாக தும் நமது அருமைத் தோழர் ன் கூட, நடிப்புப் புலவர் ஆர். ராமசாமி அவர்கள் தனது சபையைச் சேர்ந்த தோழர்க ளான: எம். என். கிருஷ்ணன், மகாலிங்கம், மருதப்பா, என். எஸ். கணேசன், உசேன் ஆகியோருடனும் ராசையா, ஆறுமுகம், வேறு பல தோழர்களுடனும் வந்திருந்து சிறப்பாக நடத்திக் கொடுத்து, குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் அன்பையும் பெற்றார்.

சென்னையில்மட்டும் என்றல்ல, அதற்கு ஒரு வாரத்திற்கெல்லாம் 29—1—50 அன்று கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிடமுன்னேற்றக் கழக மாநாட்டிலும் தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் தனது நாடக சபையினரோடு வந்திருந்து, கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான விவசாய மக்களையும், அறிவைக்கிளறும் சமுதாய நாடகமூலம் களிப்புக்கடலில் ஆழ்த்தினர்.

வளைவுகள், 'வருக வருக' என வரவேற்கும் அலங்கார மயமான அழகிய போர்டுகள், மூன்று மைல் தொலைவிலேயே கிழக்கு மேற்காகச் செல்லும் பாதையில் அமைக்கப் பட்டிருந்த அழகு! கமுக மரம் ஒன்றை, அப்படியே அடியோடு பெயர்த்து குருத்தையும்கொய்யாது கொடிமரத்துக்கென நிமிர்த்து வைத்திருந்த முயற்சி! 'எது வேண்டும், இதோ' என்று பாய்ந்து, ஓய்வு ஒழிச்சலின்றி ஓடியாடிய தொண்டர்களின் பெருமை! அலங்காரமான பந்தல், முகப்பில் கம்பீரமாக உயிர் பெற்று வந்ததுபோல நின்ற கொங்கு நாட்டுச் சிங்கம், மறைந்த நண்பர் அர்ச்சுனனுடைய அழகிய உருவம்! அத்தனையையும், கண்டபொழுது, கோவை மாவட்ட இயக்கத் தோழர்களின் பெருமையும், செயல் புரியும் வன்மையும் கண்டோரையெல்லாம் திகைக்கச் செய்தன! ஒரு பக்கம், குழுமிய பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் உணவு அளித்து உபசரித்ததை எண்ணினாலே, 'எதையும் சாதிப்பவர்கள் நமது நண்பர்கள்' என்ற தற்பெருமை நம்மை பூரிக்கச் செய்கிறது! உணவு உட்கொள்ளும் இடத்திற்குச் செல்ல ஒருவர்பின் ஒருவராக கொளுத்தும் வெய்யிலையும் பாராது 'க்யூ' வரிசையில் நின்ற காட்சி, நமது இயக்கத்தோழர்களின் கட்டுப்பாட்டையும் அமைதியையும் உணர்த்தியது!

முதல் நாள் இரவுமுதல் மறுநாள் வரை கணியூர் நோக்கி, கோவை மாவட்டக் கிராமப் பகுதிகளிலிருந்தெல்லாம் மக்கள் வந்துக்கொண்டிருந்தகாட்சிசாரைசாரையாகநகர்ந்து செல்லும் எறும்புக் கூட்டம் போலிருந்தது! உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை! அவ்வளவு கூட்டம் ரோடுகளிலெல்லாம்!

இரவும் நிலவும் அங்கு இன்பக் காட்டி நெளிந்தோடின! ஓட்டம் பயிலும் ஒன்பது, பத்து பிராயமுடையோரிலிருந்து கோட்டை பிடிக்கும் வீரர்கள் போல நடை போட்டுவந்த விவசாய வீரர்கள் வரை, நடந்துவந்த அழகு, பார்க்கப் பார்க்க குதுகலமாயிருந்தது! நாட்டின் நிலைபேசி நண்பர்கள் கூடிவந்தனர் ஓர்புறம், ஆட்ட நடை நடந்தே ஆடி நடந்தனர் பெண்மக்கள்!

"என் வாழ்நாளிலேயே இப்படிப் பார்த்ததில்லை. என்ன கூட்டம். பாருங்கள் அவ்வளவு பேரும் பாடுபட்டு வாழும் பெருமக்கள்"—என்றார் ஒருவர்.

"நமதியக்கத்துக்கு நற்றொண்டர் கே. எ. மதியழகனைத் தந்த கணியூர், நமது எண்ணம் உள்ளளவும் இம்மாநாட்டால் மறையாத பெருமையைப் பெற்றுவிட்டது" — என்றார் இன்னொருவர்.

"நூற்றுக்கணக்கான தோழர்களுக்குப் சலிக்காது வெந்நீர் போட்டுத் தரப்படுகிறது குளிப்பதற்கு பார்த்தாயா, மதியழகன் வீட்டில்" என்று ஆச்சரியத்துடன் கூறினார் ஒரு சென்னை நண்பர்!

எங்கு பார்த்தாலும், மாநாட்டின் அழகு, சிறப்பு, ஒலி பெருக்கி

(10-ம் பக்கம் பார்க்க)



★

திராவிட நாடு

ஞாயிறு 5—2—50 காஞ்சி

சிந்தாமணிச் சிரிப்பு!

✻

"மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை"

"ஈருடல் ஓருயிர்போல் இனிவாழ்வோம்"

"இசையமுதே, கனிரசமே உன்னை நான் என்றும் மறவேன்"

'கண்ணாளா — மன்மையன் நீக்காண் பேனே வேறொருவரை நீயன்றோ என் நெஞ்சைக் கவர்ந்தவர்."

சிந்தாமணியின் சிரிப்பும், சிங்காரப் பேச்சும், அவனது உயிரைக் குத்தும் ஈட்டிகளாயின! ஊண், உறக்கம், மனை, மனைவி எல்லாம் அவன் நினைவை விட்டு நீங்கின— அவளது அணைப்பே இவ்வுலகம், வாய் மொழியே வாழ்வு என்று மோகன லாகிரியில் மூழ்கிக் கிடந்தான்!

தெருக்கோடியில் அவன் வரும்போதே சிந்தாமணியின் தாய், நாணுவாள், கோணுவாள் 'மாப்பிள்ளை வந்துவிட்டாரடி!' என்று மகளுக்குச் சொல்லுவாள். 'அவர் வந்துவிட்டார். உட்காரவும் நேரமில்லையென்று' ஓட்டமும் நடையுமாயிருப்பாள்—ஒரு வேலையுமில்லாவிட்டாலும், அவன்மீது அவ்வளவு மரியாதை வைத்திருப்பதாகக் காட்டிக் கொள்வாள்!

ஆசை மனைவியை மறந்தான், துயர் வாய்ப்பட்ட சொந்தத் தாய் அவன் நினைவில் படவில்லை, மழை இடி, காற்று, இருள் எதுவும் அவனைக் கலக்கவில்லை — ஆசை வெறியால், ஓடினான், 'சிந்தாமணியே, நந்தா விளக்கே" என்று கதவைத் தட்டினான்!

தாள் திறக்கப்படவில்லை, 'யாரடா அவன் அர்க்கராத்திரியிலே' என்று சிந்தாமணியின் தாய் கேட்டாள், 'அவர்' போய் 'அடா' வந்தது!!

"காசில்லாதவனுக்கு இங்கென்ன வேலை'யென்று விரட்டினாள்—சிந்தாமணியின் ஆசையில்மயங்கி, மோகன லாகிரி கொண்டு, இருந்த சொத்தையெல்லாம் இழந்துவிட்ட பில்வமங்கள்—இரத்தம் வற்றிப் போன பிரேதமாகத் தென்பட்டான் சிந்தாமணியின் தாய்க்கு! காலியான பாண்டமாகி விட்டான்!

கதறிப் பயனில்லை, கதவை இடித்துப் பயனில்லை, குமுறினான் நடுவீதியில் நின்றுகொண்டு!

சிந்தாமணி படத்தில் இக்காட்சியைக் காணும்போது, எவரும் பரிதாபப்படுவர் — எல்லாம் கொடுத்தானே, இருந்தா அவனுக்கு இரக்கம்! காசில்லையென்றதும் 'கண்டது யாரடா நீ' என்று விரட்டினாளே, கருணைகாட்டினாளா சிந்தாமணியின் தாய்' என்று பேசிக்கொள்வர் தாசிகளின் மோசவலையில் சிக்கினால் இதுதான் முடிவு, என்று ஒருவருக்கொருவர் உரையாடிக் கொள்வர்!

X X X

வருமானவரியில் மாகாணங்களுக்குள்ள பங்கை நிர்ணயம் செய்து சிந்தாமன் தேஷ்முக் அளித்திருக்கும் முடிவைக் காணும்போது, நமக்கு, சிந்தாமணியின் காட்சிதான், சிந்தனைக்கு வருகிறது.

மாகாணங்களுக்கு வருமான வரியில் கிடைக்கும் வருமானத்தில் எவ்வளவு பங்கு அளிப்பது என்பது குறித்து, ஒரு முடிவு கூறும்படி, சிந்தாமன் தேஷ்முக் என்பார்வசம் கடந்த ஆண்டு நவம்பர் 26-ந்தேதி பொறுப்பளித்திருந்தனர் இந்திய சர்க்கார்.

ரிசர்வ் பாங்கின் கவர்னராகயிருந்து தொண்டுபுரிந்த அச்சீமான், மத்திய சர்க்காரின் கட்டளைக்கேற்ப, மாகாணங்களுக்குரிய பங்கை நிர்ணயம் செய்து இம்மாதம் முதல் தேதி, வெளியிட்டுள்ளார்.

அம்முடிவைக் காணும்போது, இருப்பதையெல்லாம் இழந்துவிட்டு, கடைசியில் கதவு திறக்கப்படவில்லையே என்று கதறிய 'சிந்தாமணிக் காட்சி' கண்ணுக்குத் தெரிகிறது.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் எவ்வளவு கொடுப்பது என்று நிர்ணயம் செய்யுமாறு கட்டளையிட்டனர்— மத்தியசர்க்கார் — முடிவும் கூறப்பட்டுவிட்டது. மாகாணங்களிலிருந்து வசூல் செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களில் 'கொஞ்சம் பிச்சை' போடுவது பற்றித்தான்,மத்திய சர்க்கார் முடிவுகூறச் சொன்னது!

இருந்த உணவை, நடுத்தெரு நாராயணனுக்குப் போட்டு விட்டு அவன் நாலடி எடுத்துவைத்ததும் 'நல்லவரே, ஏதாவது தாரும், என் வயிறு பசிக்கிறது' என்று நல்ல குடும்பப்பிள்ளை கேட்பதுபோல மாகாணத்திலிருந்து வசூலாகும் வரிப்பணத்தை மத்தியசர்க்காருக்கு மண்டியிட்டுச் சமர்ப்பித்து விட்டு 'மகானுபாவரே, எங்களைப்பாரும் ஏதாவது தாரும்' என்று கேட்டா[ல்] எவ்வளவு வேடிக்கையாயிருக்குமோ அதுதான் இந்த வருமானவரி வி[வ]காரம்!

மாகாணங்கள் விவசாயிகள் தரு[ம்] நிலவரியையும், வியாபாரிகள் மூல[ம்] பொதுமக்களால் தரப்படும் விற்ப[னை] வரியையும் கொண்டு வாழவேண்டியவை! இந்த வரிகள், வளரக்கூடியவையல்ல, வரவர, தேய்மிறையாக கூடியவை!

அள்ளக்குறையாத அமுதம்போல் இருப்பவை சுங்கவரி, கலால்வ[ரி] வருமானவரிமுதலியவை மக்கள்மீ[து] நேரடியாக ஏற்றப்படாத சுமைகள் அதே வேளையில் நிறைய வருவா[ய்] தரக்கூடியவை! ஆனால், இந்த 'வ[ற்றா] நிறை வரி இனங்கள்' மாகாணங்க[ளி]டம் இல்லை. மத்திய சர்க்காரின் ஆ[டம்]பரச் செலவு, ராணுவம், பாதுகா[ப்பு] படாடோபம், பயமறியாப் பேச்[சு] நிர்வாக மூட்டை, ஆகியவைக[ள்] இந்த வருமான இனங்கள் தா[ன்] பெரும்பாலும் சரிக்கட்டுகின்றன!

ஆனால் மாகாணங்களோ, ம[டி] நிறைந்ததை யெல்லாம் ஆசையா[ல்] அன்புச்சொல்லால் 'என்று இணைந்து வாழ்வோம்' எ[ன்ற] ஏமாற்று வார்த்தையால் மயங்[கி] கொட்டிக் கொடுத்துவிட்டு, [த]வாழ, மடிப்பிச்சை ஏந்தவேண்[டி] இருக்கிறது!

இந்த 'மடிப்பிச்சை' காரணம[ாக] கொண்டுசெல்லப்பட்ட வரும[ான] வரியில், ஏதாவது கொஞ்சம், அ

...ண்டு மத்திய சர்க்கார்! அப்படி ...ளிக்கும் 'பிச்சை'யை அளந்து ...டுவோம், என்ற எண்ணத்தில், ...ர்ணயம் செய்யுமாறு கட்டளை ...ட்டனர், சிந்தாமன் தேஷ்முக் ...க்கு, இந்திய சர்க்கார்.

இந்த வருமான வரிப்பிச்சையில்: ...து மாகாணத்துக்கு 18 சதவிகி...ம், வழங்கப்பட்டு வந்தது. ஆமாம், ...ற்றுக்கு பதினெட்டு! அது ...டாது, போதாது, அதிகம் வேண்...ம் என்று அடிக்கடி குறையீடும், ...றைபாடும் இங்குள்ளவர்களால் ...தரிவிக்கப்பட்டு வந்தன. சென்னை ...ட்டும் என்றல்ல, வங்கம், பம்பாய் ...தலிய மாகாணங்களும், வரு...ன வரியில் அதிக பங்கு வேண்...ம் என்று அடிக்கடி கூச்சல் ...ழுப்பியவண்ணமிருந்தன. எத்த...ையோ தடவைகள், இக்கூச்சல், அந்...த மாகாணத்தவரால், எழுப்பப்...ட்டிருக்கின்றன.

இங்கும் வேதனை அதிகமாகி, ...செலவுக்குத் திண்டாட்டமும், பண...மில்லையே கடன் வாங்க இடமில்லையே ...ன்ற கலக்கமும் எழும்பிய ...போதெல்லாம் நிதி மந்திரி மகாபா...ர் பல இடங்களில் பேசுகையில் ...ருமான வாய்க்கால்கள் மத்திய ...க்காருக்கே போய்விட்டன. மாகா...ணங்களுக்கு அதிகம் அளிக்கப்பட...ண்டும்' என்று ஆத்திரமும், ...வேசமும் கலக்கப் பேசிவந்...ள்ளார்!

வருமான வரிப் பங்கீடு பற்றி ...ந்தாமன் தேஷ்முக் விசாரணை ...ய்தபோது கூட, மாகாண சர்க்...ர், அவரிடம் ஒரு வேண்டுகோள் ...ர்ப்பித்திருந்தனர்.

> 60 சதவிகித வருமான வரியை மாகாணங்களுக்குப் பங்கு போட்டுத் தர வேண்டும்.
>
> வசூல் விகிதப்படி கணக்குப் போடாது மாகாணத்தில் வாழும் மக்கள் தொகையை வைத்து வருமான வரிப்பங்கு வழங்க வேண்டும்.

...பதுதான், அந்த வேண்டு...ளில் இருந்தவை. மாகாண ...க்கார், வருமான வரியில் அதிக...கு வேண்டுமெனக் கோரியதில் ...த்தமில்லாமலில்லை. இங்கிருந்து ...லிக்கப்பட்டுக் கொண்டு செல் ...தானே வருமானவரி என்பதால்

அல்ல! உண்மையில் மாகாண சர்க்காரின் நிதி நிலை புயலில் சிக்கிய படகு போலிருக்கிறது, மக்களுக்கான நன்மைகளைச் செய்யத் திண்டாடித்தெருவில்நிற்கின்றனர், 'செய்வகை அறியாது விவசாயியிடம் செல்வோமா, வேறு எங்காவது செல்வோமா என்று 'பணம் பிடுங்கும் பாதை' பார்த்துக் கொண்டிருக்கின்றனர்!

இல்லை! இல்லை!! என்கிற கூக்குரல் எங்கு சென்றாலும் நமது மந்திரிமார்களிடத்தில், மக்களால் எதிரொலிக்கப்படுகிறது. வேதனையும் சோகமும் தாக்க மக்கள் தரும் அடி ஒரு பக்கமும், பணமில்லாத கஷ்டம் இன்னொரு பக்கமும் இடிக்க, 'எப்படி வாழ்வேன்?' என்று முகாரியைப் பாடுகின்றனர். பணம் வேண்டும் கடனாகவாவது தருவீர்களா, என்று மேலிடத்தாரை நோக்கி கையேந்தினாலோ, பலன் கிட்டுவதில்லை; பயமுறுத்தலும், 'பார்க்காதே இங்கே' என்ற பதட்டச் சொல்லுந்தான் பரிசாகக் கிடைக்கிறது; பில்வமங்களுக்குக் கிடைத்தது போல!

எனவே, மாகாண சர்க்கார் வருமான வரியில் தரப்படும் பங்கை அதிகரிக்க வேண்டும், அதன் மூலம் கிடைப்பது சிறு தொகையாக இருந்தாலும், ஏதாவது ஒரு அல்லல் தீர்க்க வழியேற்படும் என்று கோரினர்; கேட்டனர்! ஆனால், சிந்தாமன்,

> சென்னை மாகாணத்துக்கு 17½ சதவிகிதம்தான் பங்கு உண்டு.

என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்.

இருள் நிரம்பிய காட்டில் இடி! புலிக்குப் பயந்தவன்மீது சிங்கம்! கடந்த ஆண்டில் கிடைத்த பங்கு 18 சதவிகிதம், இனி கிடைக்கப் போவதோ 17½ சதவிகிதம்!!

அரை சதவிகிதந்தானே என்று அலட்சியப்படுத்திவிட முடியாது, அந்த அரை தருவது ஒன்று பத்தல்ல இருபது லட்ச ரூபாய்கள்!

'பஞ்சமும்பிணியும் எங்கள் மாகாணத்தைப் படையெடுத்துவருகிறது, பதறித்துடிக்கின்றனர் மக்கள், பாரும், கருணை கூரும்' என்று கேட்டவர்களுக்கு முன்பு கிடைத்ததிலும் பறிபோகிறது, குறைக்கப்பட்டிருக்கிறது, சிந்தாமன் தீர்ப்பால்!

ஆனால் அதேவேளையில், ஆலைவளம் நிரம்பிய பம்பாய்க்குத்தர முடிவு செய்திருப்பது 21 சதவிகிதம்; கிழ் பஞ்சாபுக்கு முன்னைவிட ½ சதவிகிதம் அதிகம் கூட்டி; மேல் வங்கத்துக்கு 1½ சதவிகிதம் மேலும் அதிகமாக!

சென்னையைப்போலவே, எங்கட்கு அதிகம் வேண்டும் என்றுகிளர்ச்சி செய்தவைகள், பம்பாயும், மேல் வங்கமும். அவைகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சென்னையில் வேண்டுகோளோ நிராகரிக்கப்பட்டிருக்கிறது, இருப்பதிலும் குறைக்கப்பட்டிருக்கிறது!

மக்கள் தொகையிலும், நிலப்பரப்பிலும் சென்னை அந்தமாகாணங்களை விடச் சிறியதல்ல; சிங்காரமானது, செழிப்பு நிறைந்தது, வருமானம் தருவது, வளங்கள் நிரம்பியது — ஆனால் இப்போது வறுமையால் தள்ளாடுகிறது!

பம்பாயில் 2 கோடி மக்கள் என்றால், சென்னையில் 5 கோடி மக்கள் வாழ்கிறார்கள்; நிலப்பரப்பும் 76,443 மைல்கள் என்றால், இங்கு 1,24,363 மைல்கள்! மேற்கு வங்கமும் கிழ்ப்பஞ்சாபும் சென்னையை விட நான்குமடங்கு சிறியவை! இருந்தும் தராசு அங்குதான் சாய்ந்திருக்கிறது; கவனம் சென்னையின்மீது செல்லவில்லை!

நமது மாகாணத்துக்கு வருமான வரிப்பங்குமூலம் கிடைத்துவருவது சுமார் 8 கோடி ரூபாயாகும். இதில், புதுத்தீர்ப்புபடி 20 லட்சங்கள் குறைந்துவிடும்.

இந்தக் குறைவைச் சாமான்யமெனத் தள்ளிவிடுவதற்கு, இப்போது இம்மாகாணம், செல்வத்தால் நிரம்பிக்கிடக்கவில்லை, சிந்தையெல்லாம் மகிழ்ச்சியால் குளிர்ந்துகிடக்கவில்லை.

இதை நாம் எடுத்துக்காட்டினாலும், காரணங்கள் பல கூறி விளக்கினாலும், இங்குள்ள நமது தேசிய நண்பர்களில் பலருக்கு—நாளை, நம்முடைய சுகதுக்கங்களுடன் பங்கு போட்டுக்கொண்டு வாழப்போகின்ற உடன்பிறப்பாளர்களுக்கு — சீற்றமும், சிந்தாகூலமும்தான் ஏற்படும். அவர்கள் பார்வைக்கு இதைவைக்க விரும்புகிறோம்,

"இம்மாகாணத்தைப் பொறுத்த வரையில் சிந்தாமணி தேஷ்முக்கினுடைய முடிவு ஒரு ஏமாற்றமாகும்"

தலையங்கத்தில் எழுதியிருக்கிறது—நம்முடைய தாளல்ல; "இந்து" பத்திரிகை! ஏமாற்றம் என்று எழுதுகிறது, நாமும் அதைத்தான் சொல்கிறோம் ஏமாற்றப்படுகிறோம் என்று!

நாம் ஏமாற்றப்படுவது இதுதான் முதல் தடவையென்பதல்ல; மாகாண சர்க்கார் நீர்ப்பாசனத் திட்டம், உணவுப்பெருக்கம் ஆகியவைகளுக்கெனக் கடன்கேட்டபோதும், 'இல்லை, கிடையாது' என்ற பதிலைத்தான் பெற்றது மத்திய சர்க்காரிடமிருந்து! இதுபோல, எல்லாத் துறைகளிலும், நமக்கு கிடைப்பது — வடநாட்டு ஆட்சியாளரால் ஏமாற்றம்தான்!

* * *

காற்றுக் குளிர்ந்தளிக்கும் நாடு, கனப்பொருள் கிடைக்கும்பூமி கண்ணாடிப் போன்ற நீர் சுரக்குமதேசம், கன்னலும் செந்நெலும் கவின்பெற்றுத் திகழும் மண் கொண்டோர் நாம்! இன்னிசைபாடும் குயில்கள், நடனம் ஆடிடும் மயில்கள், கவலை போக்கும் மலைச்சாரல்கள் நிறைந்தோர் நாம்! வாழவழியுண்டு, வருமானமுண்டு! இருந்தும் வக்கற்றவராகிறோம், சுரண்டப் படுகிறோம், சூறை கொள்ளப்படுகிறோம், வீதியிலே தள்ளப்படுகிறோம்!

ஓரே நாடு, ஓரே மக்கள்—கூடி வாழ்வோம் என்ற ஆசைவார்த்தைகளுடன் சிந்தாமணிச் சிரிப்பு, நம்மை ஆட்படுத்துகிறது, மயக்கி வீழ்த்துகிறது—நம்மால், நன்மையும், நலனும் கிடைப்பதால்! நாம், 'கதியிலலை' என்ற சொல்லுடன், வாயில் ஏறிச்சென்று, கதவைத் தட்டினால், 'செல்லடா, நீ யாரடா' என்ற மரியாதை கிடைக்கிறது, முகத்திலே மண் வீசப்படுகிறது!

வடநாட்டுப் பிணைப்பு—ஒரு சிந்தாமணிச் சிரிப்பு! சித்திரவதை செய்யும் சிலந்திக்கூடு! இதை எண்ண வேண்டும், இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கும் நண்பர்கள்—நமதுசகோதரர்கள்!

✲

7-ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பு, மின்சார அலங்காரம் பற்றிய பேச்சாகவே யிருந்தன.

கணியூர் மாநாடு கருத்தைக் கவர்ந்துவிட்டது, கனவுலகக் காட்சிகளோ என்று நெஞ்சை யள்ளிவிட்டது, கோவை மாவட்டத் தோழர்களின் செயல் புரியும் வீரமும், தொண்டுச் சிறப்பும், இயக்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியன.

செயலாளர் கே. ஏ. முருகேசன், துணைச் செயலாளர்கள் கே. என். ஏ. முத்து, எம். உதுமான், பொருளாளர் ஆர். மீனாட்சிசுந்தரம், விளம்பர உறுப்பினர் டி. வேங்கடாசலம், ஆகியோர் என்றென்றும் நினைவில் நிலைக்கக்கூடியவர்கள்.

யாவரையும் வரவேற்றுப் பேசிய பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி, பெருமிதத்துடன் கூறினர் இன்னும் எத்தனை கழகங்கள் ஏற்படப் போகின்றன தெரியுமா' என்று.

மாநாட்டில் குறிப்பிடக் கூடிய பேருரை, நண்பர் சண்முகம் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவுதான் வெற்றி முழக்கமும் விவேக விளக்கமும் அவரது அருமையுரையிலே கலந்திருந்தன. அகில உலகப் பிரச்னைகள் முதல் அரசியலமைப்பு பித்தலாட்டம் வரை, மக்களின் அன்றாடப் பிரச்னைகள் முதற்கொண்டு எதிர்கால வாழ்வு எப்படியிருக்க வேண்டும் என்பதுவரை, இளம் இதயமும், அறிவுத் திறனும், ஆர்வமும் கொண்ட அவரது அருமையான சொற்பொழிவிலே, இருந்தன. தோழர் ப. உ. சண்முகம், ஆற்றிய சொற்பொழிவு உண்மையிலேயே மிக மிக தெளிவாக, சிறந்ததாக இருந்தது! அறிவியக்கம் எத்தகைய ஆற்றல் வீரர்களைத் தயாரித்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியது!

மாநாட்டை பேளுக்குறிச்சி தோழர் சோமசுந்தரம் துவக்கி வைத்தார். விவசாயப் பெருங்குடி மகனான அவரது வீரஉரைகள், வெற்றிப்பாதையில், நடந்து செல்பவர்களின் வழிகாட்டியாக இருந்தது—இயக்கத்தில், எத்தனையோ ஆண்டு காலமாகயிருந்து, சுயமரியாதையே சுகவாழ்வு என்று செயலால் காட்டிவரும் சிந்தனைச் சிற்பியான அவரை மேடையில் கண்ட மக்கள் புளகாங்கிதமடைந்தனர்!

மாநாடு துவக்கப்படுமுன் நகைச்சுவையரசு தோழர் என். எஸ். கிருஷ்ணன், கே. ஆர். செல்லமுத்து, ராதாகிருஷ்ணன் முதலிய தனது தோழர்களுடன் வந்திருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிய வில்லுப்பாட்டு நடத்தினர்.

கோவையும் — சென்னையும், வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி விழாக்களாயிருந்தன! வீரர் முகாம்களாகயிருந்தன! நகரிலும், நாட்டிலும், நமக்கு வளர்ந்துவரும் செல்வாக்கை எடுத்துக் காட்டின! நமது கொள்கைகள் எவ்வளவு வேகமாகப் பரவுகின்றன. மக்கள் மன்றத்தில் என்பதை கணியூர் காட்டியது, சென்னை உணர்த்தியது! இரு மாவட்ட மாநாடுகளும்—நமது வெற்றி விழாக்கள்—நமது கொள்கைகள் பரவ நாம் கண்டு மகிழும் வெற்றித் திருநாட்கள்!

✲

விகடரே விசாரம் வேண்டாம்!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, நெருக்கடியான இந்நேரத்தில் இவரை இழக்கலாமா என்று கேட்கிறார். அவரது கேள்வியில் அர்த்தமிருக்கத்தான் இருக்கிறது. நாடு, காடாகிக்கொண்டே போகிறது நல்லநிலை யேற்படவில்லை, மனக்குறையும் மனக்கசப்பும், வேதனையும் சோதனையும் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது — விகடர் கூறுவது போல! ஆனால், அத்தனையும் காங்கிரசார் ஆளவந்த பின்னர்தான் — சுயராஜ்யம் வந்தபின்னர்தான் என்பதை நாட்டுமக்களைப்போல, அறியாதவர் என்று கூறமுடியாது — பல தடவைகளில் அவரது பேனா, இக்கருத்தைக்கொண்ட எழுத்துக்களைத் தீட்டியிருப்பதால்!

இவ்வளவு மோசமான நிலைக்கு இந்த மூன்று ஆண்டுகளில் — நாடு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. உண்மை; மறுக்கமுடியாதது! ஆச்சாரியார், குடியரசுத்தலைவர் ஆக்கப்படவில்லை என்ற ஆத்திரத்தால் நாட்டில் நிலவும் நெருக்கடியைக் கவனத்துக்குக்கொண்டுவந்த ஆச்சாரியார் ஆதரவுக்குழுவின் தூதுவரான ஆனந்த விகடன் தலையங்கத்தார் ஒன்றை மறந்துவிட்டார், அடுக்கடுக்காக நாட்டில் நிலவும் அல்லல்களைக் குறிப்பிடும்பொழுது!

இத்தனை கேடும், ஆச்சாரியார் அவர்கள் மத்தியசர்க்கார் மந்திரியாகவும், கவர்னராகவும், கவனர்ஜனரலாகவும் இருந்தபோது—ஏற்பட்டு வளர்ந்து வந்தவைதான். இந்த கேடுபாடான நிலை படிப்படியாக ஆளவந்தாரின் கவனக்குறைவால், வளர்ந்தபோது, ராஜதந்திர மேதை, நிர்வாகப் புலி, திறமைசாலி சி. ஆர். ஜனைபாடிக் கொண்டிருக்கவில்லை, திருப் பிரச்சாரம் செய்யவில்லை, ஆளவந்தவர்களில் முதல்வராக, அச்சாணிபோல இருந்தார்! அவர், இருந்தபோதுதான், விகடன் குறிப்பிடும் விளைவெல்லாம் ஏற்பட்டிருக்கிறது — வளர்ந்து வந்திருக்கிறது. அவரது ராஜதந்திர மேதையும், நிர்வாகத்திறமையும், அரசியல் தந்திரமும், இத்தனை வேதனைகளை தடுத்துவிடவில்லை, நிறுத்திவிடவில்லை—மாறாக வளர்ந்துகொண்டுதான் வந்திருக்கின்றன!

“எத்தனையோ ராஜாஜி இப்பொழுது தேசத்துக்குத் தேவையாயிருக்க, இருக்கிற ஒரு ராஜாஜியையும்........”

என்று கூறுகிறார். திறமையின் சிகரமாக, இந்திய அரசாங்கத்தை யேற்று நடத்திச்செல்ல வல்லவராக ஒரே ஒருவர் தான் இருக்கிறாராம். அவரையும் விலகிக்கொள்ள விடுவது தேசத்துக்கே பெருத்த நஷ்டமல்லவா, என்று கேட்கிறார். நமது தலைவர்கள்—நாட்டின் பொக்கிஷங்கள். என்று பண்ணையில் பேசப்பட்ட நாட்கள், நண்பரின் கவனத்திலிருந்து மறைந்துபோய் விட்டது, ஆத்திரமோ, அல்லது ஆவேசமோ நமக்குத் தெரியவில்லை! இப்போது ‘இருக்கிற ஒரு ராஜாஜி’ என்று எழுதுகிறார்!!

புதிய

தொடர் கதை

?

..................?..................

விரைவில் துவங்கும்

“அறிவுக்கும் திறமைக்கும் கதவைத் தாளிடும் பேதமையை, இந்நாட்டில் தவிர உலகில் வேறு எங்குமே காணமுடியாது.” என்று கண்டனம் தரும், தலையங்க நண்பரை நாம் கேட்கவில்லை — என்றாலும் நாடு கேட்காதா, “நல்லதுதான் சொல்கிறீர். ஆனால், இந்த அறிவும் திறமையும் எங்கே போய்க்கிடந்தன—நாட்டில் அல்லலும், திறமைக்குறையும் வளர்ந்தபொழுது. அன்றும் ராஜாஜி ஆளவந்தாராகத்தானேயிருந்தார். ஏன், இவைகளைத் தடுக்க முடியவில்லை” என்று!

ஆச்சாரியாரின் அறிவுத்திறன், புத்திகூர்மை, நிர்வாகத்திறமை ஆகியவைகள் குறித்து இப்போது பிரமாதமாகப் பேசப்படுகிறது— விகடரால் என்று மட்டுமல்ல, பலரால், முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக!

இத்திறமைகள் அவரிடம் உண்டா, எப்போதாவது வெளியாகியிருக்கின்றனவா, மாகாணத்தின் முதலமைச்சராகயிருந்தபோது இந்த குணங்களால் என்ன நன்மை யேற்பட்டது என்ற சந்தேகங்களை, நாம் எழுப்ப விரும்பவில்லை. எனினும், இவர்களால் கூறப்படும், இந்த குணங்களே, அவரை ஒரு பெரிய தலைவராக ஆக்கியது—என்று கூறப்படுவதை, எவரும் ஏற்கமாட்டார்கள். இவைகளையெல்லாம் விட ஆச்சாரியாரிடம் இன்னொரு குணமும் இருந்தது! அது, சந்தர்ப்பம் கண்டு, ஒதுங்க வேண்டுமென்றால் ஒதுங்கி, ஒட்ட வேண்டுமென்றால் ஒட்டி, தன் நிலையை நற்பாதையில் வைத்துக்கொள்ளும் திறமை!

ஆகஸ்டு ’42 கலவரத்தை அரசாங்கம் அடக்கிவிடும் என்பதை யுணர்ந்தார்......ஆகவே, விலகிநிற்பது நல்லது என்று சொல்லாமல் செயலில் காட்டினார்!

கம்யூனிஸ்டுகள் கரம் வலுப்பதைக் கண்டார்—போன்மலை மாநாட்டிற்குச் சென்றார், கம்யூனிச நூல்களை யெழுதினார்!

பாகிஸ்தான் பிரச்னை மறுக்கமுடியாத ஒன்று என்று எண்ணினார். அதை ஆதரித்து, தன் பேச்சையும், புகழையும் அதிகரித்துக் கொண்டார்!

மத்திய சர்க்கார் மந்திரியாகயிருந்தபோது வங்கக் கவர்னர் ஆக்கினார், இவரை. மறுக்கவில்லை, ஏற்றுக்கொண்டார், இதுவும் நல்லதுதான் என்ற எண்ணத்தில்!

எனவே, ஆச்சாரியாரை, சந்தர்ப்பங் கண்டு, அதை யனுசரித்து, அந்தச் சந்தர்ப்பங்களை தன் வெற்றிப் பாதைக் குரியவையாக ஆக்கிக்கொள்ளும் சிறந்த சந்தர்ப்பவாதி என்று அழைக்கலாம்—இதன் காரணமாகவே அவருக்கு சாணக்கியர் என்ற பட்டப் பெயர் சூட்டியும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே அழைப்பதுண்டு!

குடியரசுத் தலைவர் தேர்தல், ஒரு பிரச்சனையாக, போட்டிச் சண்டை அதிகமாகும்போல் தோன்றியதும், போட்டியில் வெற்றி தனக்கு கிடையாது என்று கண்டதும், சந்தர்ப்பம் அறிந்து ஒதுங்கிக்கொண்டிருக்கிறார். —ஒதுங்கிக்கொண்டு விட்டாரே யொழிய ஓடிவிடவில்லை, இவ்வுலக

மாயாபந்தங்களை ஒதுக்கித்தள்ளி விட்டு ஆரண்யவாசத்திற்கு!

சென்னைத் தியாகராய நகரில் தனது வீட்டில்தான் இருக்கிறார். முற்றும்துறந்த புனிபுங்கவராகிவிட வில்லை.

எனினும், விகடர்,எழுதியுள்ளார்' அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படாததால் நாட்டு நெருக்கடியைத் தவிர்க்கும் நல்லவரை நாடு இழந்து விட்டது என்று.

நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க, தலைவராகயிருந்தால்தான் முடியும் என்று கூறமுடியாது. ஆச்சாரியார், கவர்னர் ஜெனரலாக இருந்த பொழுது தன்னுடைய அறிவுரைகள் மூலம் கெட்டவழியில் செல்லவிருந் தவர்களை நற்பாதையில் திருப்பி அழைத்துச் சென்றிருக்கிறார் என்றால், நிச்சயம் இப்போதும் அவருடைய யோசனைகளை நாடத்தான் செய்வர், நேரு, பட்டேல் போன்றவர்கள்!

மக்கள்நலனில் அக்கறையும்,அவர்கள் வாழ்வை வளம் பெறச் செய்வதில் ஆசையும் இருக்குமேயானால் எந்த இடத்திலிருந்து கொண்டும் யோசனைகள், கூறலாம். நிர்வாகத் தலைவராக இல்லாவிட்டால் கூறக் கூடாது என்பதில்லை;

காந்தியார் — கவர்னர் ஜெனரல் பதவி வகிக்கவில்லை, எனினும் அவருடைய வார்த்தைகளை, அறிவுரையாகக்கேட்டு, நடக்கவில்லையா, ஆளவந்தார்கள், அப்போதைக்கப்போது! எனவே, ஆச்சாரியார் அவர்கள் இந்தியக்குடியரசுத்தலைவர் பதவி அளிக்கப்படவில்லையென்றதும், "போதுமடா இவ்வாழ்வு! பொல்லாங்கு நிறைந்த துன்பவாழ்வு!" எனறுரிஷியாகிவிடவில்லை, அரசியல் அஞ்ஞாதவாசமும் புறப்பட்டுவிடவில்லை. எனினும் விகடன் எழுதியுள்ளார் நாடு அவரை இழந்துவிட்டது என்பதாக!

இவ்வளவு வேதனை, எச்சரிக்கை, சோகம், துயரம், சி. ஆர். அவர்களை தலைவராகத் தேர்ந்தெடுக்க வில்லையென்றதும், "விகடர் வட்டாரங்களில்" எழும்பியிருக்கிறதென்றால், இதற்கு என்னகாரணம் கூறமுடியும்? ஏதாவது வேறு காரணங்கள், "இவர்களிடை"யும் இருக்கலாம் என்பதைத்தவிர!

சி. ஆர். ஒருவர்தான், இந்தியக் குடியரசுப் பதவிக்கு லாயக்கானவர், அதை நிர்வகிக்கக் கூடிய திறமைசாலி என்ற எண்ணத்தில், விகடன் தலையங்கத்தாரின் எழுத்துக்கள் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் தாங்கிக் கொண்டு ஓடிவந்திருக்கின்றன. பட்டேல், நேரு, பிரசாத், ஆசாத் ஆகிய தலைவர்களெல்லாம், அவர் கண்களில் படவில்லை; ஒரே ஒருவர் தான் இருக்கிறார், அவரையும் இழப்பதா என்று கேட்டுள்ளார்! அந்த ஆத்திரத்தில்,

புறக்கணித்து விட்டார்கள்
இமாலயத்தவறு செய்துவிட்டார்கள்

தேசத்துக்கே பெருத்த நஷ்டம்

யாராவது சிந்தித்தார்களா?
வேறு காரணங்களிருக்க வேண்டும்

என்ற வார்த்தைகளுடன் "திறமை ஒரு குற்றமா?" என்று வேதனையோடு கேட்டுள்ளார், விசாரம் அவரது எழுத்துக்களில் கலந்திருக்கிறது.

"வேறு காரணங்கள் இருக்க வேண்டும்" என்றால், அந்த காரணங்கள் என்ன, ஆச்சாரியாரை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிக் கூறத் தூண்டிய அத்தகைய காரணங்கள் தான் என்ன?

விகடன் கூறமாட்டார்; அவரால் கூற முடியாது; ஆம், அத்தகைய அளவில் இன்றைய காங்கிரஸ் ஆட்சி இருக்கிறது—பதவிப் போட்டிகளும், வேட்டையாடும் புத்தியும, சதுரங்க விளையாட்டும் இன்று தலைவிரிகோலமாகத் தாண்டவம் புரிகின்றன.

யார் பெரியவர், எவருக்கு செல்வாக்கு, என்ற எண்ணங்கள் பெரிய 'தலை'களிடம் நிலவுகின்ற காரணத்தால் கோட்டைக்குள்ளேயே குத்தும்,வெட்டும்,குடுமிபிடிச்சண்டையும் ஆரம்பமாகிவிட்டன! இதைப் போக்க விசாரம் பயன்பட்டுவிடாது. வேறு காரணங்கள் என்று பூசி மெழுகிப் பேசிவிடுவதால புண் மறைந்துவிடாது. விசாரம், விளக்கமாக மாறி, வேதனை நீங்கும் நிலை மலரவேண்டும்!

சி. ஆர். குடியரசுத் தலைவராக வருமாறுசெய்யத் தலைவர்கள் தவறி

விட்டார்கள். என்றால் ஏன்?—வி
டர் குறிப்பிடும் தலைவர்கள், வேண்
மானல் வடநாட்டினரே யொழி
வேற்றுக் கட்சியினரில்லையே! இரு
தும், ஏன், ஆச்சாரியாரைக் குடி
சுத் தலைவராக ஆக்க முயற்சி
வில்லை? பொறுமையா, போட்டி
குணமா அல்லது ஆச்சாரியாரி
செயல்கள் பிடிக்காததாலா?

வேறு காரணங்கள் இருக்கவே
டும் என்று கூறும் விகடரைக் கேட்
றோம். அவர் குறிப்பிடும் காரண
கள் இவையல்லாது வேறு எவைய
இருக்க முடியும்!

குடியரசுத் தலைமைப் பதவி
ஆச்சாரியார் அமர்த்தப்படவி
என்றதும் நண்பர் விகடன் தலை
கத்தாருக்கு விசாரம் எழும்பி
தேன், கோபமும் சோகமும் கல
தளித்து எழும்பியதேன்?

விளக்கம் கேட்கத்தான் விரும்
வர் மக்கள். அதற்கு 'வேறு காரண
கள்' என்று பதில் கூறிவிட மு
யாது — மக்கள் மன்றம் அ
யேற்காது!

இதை நண்பர் விகடர், விசா
ஒழிந்த நேரத்தில் சிந்தித்து
பார்க்க வேண்டும், ஏன் எ
கேள்வியை எழுப்பி பதில கா
முயலவேண்டும். அதைவிட்டு, வி
ரத்தையும் வேதனையையும் உத
கழைப்பது பயன் தாராது, எ
தைத் தெரிவித்துக்கொள்கிறோ
அன்போடு!

—✻—

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்
சந்தா சம்பந்தமாகக் கடிதம் எ
தும்போது சந்தா எண்ணைக் கு
தெழுத வேண்டும். சந்தா எ
குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்
படமாட்டா. சந்தா முடியும் தே
ஒவ்வொரு முகவரிக்கு அடியி
குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ
பார்த்துச் சந்தாவைப் புதுப்
துக் கொள்ளவும்.

மானேஜ

மத்தியவகுப்பு-ஒருமகத்தான சக்தி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் குடும்பங்கள் மாதம் சாப்பாட்டிற்கென்று எவ்வளவுசெலவு செய்கிறது என்று பார்த்தால் வருத்தம் வரும். சாதாரணமாக ஆறுபேரடங்கிய குடும்பம் ஒன்று மாதம் ரூ 106-2-0 தான் உணவுக்காக செலவழிக்கிறது. அதாவது தலைக்கு ரூ 19-4-0. நூற்றைம்பது ரூபாய்க்கும் குறைந்த ஊதியம் பெறுவோர் மாதம் ரூ 15/—தான் உணவுக்கென செலவழிக்கின்றனர்!

பொதுவாகப் பார்த்தால் ஒரு நாளைக்கு நூறு ரூபாய்க்கு குறைந்த சம்பளம் பெறுவோர், எட்டணுவும் ரூ 250/—சம்பளம் பெறுவோர் பத்தணுவும் செலவிடுகின்றனர். போதுமா? சரிதானு? என்று யோசிக்க வேண்டும்.

இந்த நிலையிலேயே மத்திய வகுப்பு மாதம் 20 சத வீதம் கடன்பட்டால் உணவு ஆலோசகர் கூறிய குறைந்தபட்ச உணவைஉட்கொள்ள ஆரம்பித்தால் என்ன கதியில் குடும்பம் போய் நிற்கும்?

உணவு சங்கதி தான் இப்படியென்றால் குடியிருக்கும் வீட்டின் விஷயம் இதைவிட பரிதாபப்பட வேண்டிய நிலையிலேயே யிருக்கிறது. குறைந்தது நூற்றுக்கு எழுபது பேர் வாடகை வீட்டிலேயே இருக்கின்றனர். அப்படி அவர்களிருக்கும் வீட்டுக்கும் சுகாதாரத்திற்கும் சம்பந்தமே கிடையாது: நகரங்களில் மற்ற இடங்களைவிட இன்னும் நெருக்கமாக வசிக்கின்றனர். கீழுள்ள அட்டவணை வருவாய்க்குத் தக்கவாறு குடும்பங்கள் வசிக்கும் இட நெருக்கடியை தெரிவிக்கிறது.

வருமானத்திற் கேற்றவாறு குடியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையும், அவர்களின் தனிப்பட்ட மனிதனுக்குள்ள இட விஸ்தீர்ணத்தை யும் காண்பிக்கும் அட்டவணை.

வருமான அளவு	நபர் (அறைக்கு)	சதுரஅடி (ஒரு ஆளுக்கு)
ரூ 100க்கும் கீழ்	3·2	49
ரூ 100-லிருந்து 150 வரை	2·8	43
ரூ 150-லிருந்து 200 வரை	2·9	48
ரூ 200-லிருந்து 250 வரை	2·6	55
ரூ 250-லிருந்து 300 வரை	2·7	50
ரூ 300-க்கு மேல்	2·2	69

சாதாரணமாக ரூ 150 வரை சம்பளம் வாங்குபவர்கள் மூன்று பேருக்கு ஒரு அறைதான் கிடைக்கிறது. அதாவது ஆளுக்கு சுமார் 16 சதுர அடி. ஒரு நாள் இரு நாள் அல்ல. வாழ்நாள் முழுவதும் இந்த 16 அடியில் காலம் தள்ளவேண்டும்! குறைந்த பட்ச உணவுகூட கிடையாது தேவையான குடியிருப்பு வசதி கிடையாது. இருந்தாலும் நூற்றுக்கு 20 பாகம் அதிகம் செலவு செய்கின்றனர். அவ்வளவு பஞ்சநிலையில் மத்திய வகுப்பு இன்றிருக்கிறது.

நடுவகுப்பு டாம்பீகமாக வீண் செலவுஏதாவது செய்துவிடுகிறதோ என்று எண்ணவேண்டாம். அந்தக் கணக்கை பார்க்கும்பொழுது நடுத்தரக்குடும்பம் ஒவ்வொன்றும் சராசரி தலைக்கு இரண்டணுவீதம்தான், வீண்விழாக்கள் கேளிக்கைகளிலே செலவழிக்கிறது.

இதைத்தவிர மாதம் ஏற்படும் வைத்திய செலவுகள், கல்விக்கான செலவுகள், முதலிய அடிப்படை தேவைகள், மிகக்குறைந்த அளவிலேயே பூர்த்தி செய்யப்படுகின்றன. இப்படியிருக்கும் நடுத்தரவகுப்பின் வருங்கால நிலை என்ன? குமாஸ்தாக்கள் குடும்பங்கள் குழித்தோண்டிப் புதைக்கப்படத்தான் வேண்டுமா? ஒவ்வொருவரும் சிந்தனை செய்ய வேண்டிய விஷயம்.

தொழிற்புரட்சி ஏற்படாத தென்கிழக்கு ஆசியாவில் நடுத்தர வகுப்பு ஒருமகத்தான சக்தி கீழ்த்தர மக்கள் இன்னும் அறியாமையிலேயே இருக்கின்றனர். அவர்களுக்கு இன்ப புரி இருக்கும் திசைகூட தெரியாது. அவர்களை தட்டியெழுப்பி அவர்களை உரிமைபோராட்டத்தில் இழுத்து வரவேண்டியதொரு பொறுப்பு நடுத்தரவகுப்பை சேர்ந்தது அரைவயிற்றுக்கு சாப்பிடும் நடுத்தர வகுப்பு கால்வயிற்றுக்கு உண்ணும் கீழ்த்தர வகுப்போடு சேர்ந்தால்தான் கொள்ளைக்காரன் அழிக்கப்படுவர். நாட்டில் சுரண்டும் கூட்டமும் சுரண்டப்படும் கூட்டமும் மறையும். இல்லாத வரையில் சமூகத்திலே பெரியமாறுதல் எதுவும் நடக்கமுடியாது.

"தங்கள் கடன்பட்ட வாழ்க்கையிலிருந்து மீளமுடியாமல் சுயநலமனப்பான்மையுடன் மனித சமுதாயத்தையே மறந்து வாழ்கின்றனர் நடுத்தரவகுப்பார். இவர்களை தட்டியெழுப்பி அறியாமையிலும், வறுமையிலும் உழன்று தவிக்கும் கீழ்த்தரவகுப்போடு ஒன்றுசேர்த்து ஒரு பெரும்படையை உண்டாக்கவேண்டும். அந்தப்படையால்தான் மனித சுதந்திரத்தை பெற்று காப்பாற்ற முடியும். பொருளாதார சீர்கேட்டை உண்டாக்கும் முதலாளித்துவத்தையும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கும் வைதீகத்தையும் முறியடிக்கமுடியும்' என்று திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் அண்மையில், சென்னையில் பேசினர். உண்மை—வகுப்பு, வர்க்கப்பிரச்னைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மத்தியதர வாழ்க்கை நிலையிலிருக்கும் மக்களைப்பற்றி,நாம் சிந்திக்கவேண்டும்.

ஆபீசுக்கு ஓடும் குமஸ்தா, அல்லலுறும் விவசாயி, திண்டாடும் திண்ணைக்கடைக்காரர், 'வீணுக்குத் திறந்தேனடா' என்று முகாரி எழுப்பும் சாதாரண வியாபாரி, ஆசிரியர்கள் அத்தனை பேரும் மத்தியதர வர்க்கத்தின்—சக்திகள்.

இரண்டுங் கெட்டான் நிலையில், பாதிக் கிணற்றைத் தாண்டியவன் போல, மேட்டிலுமில்லாது புழுதியிலும் கிடக்காது, வாழ்ந்து அல்லலுறும் மத்திய தரவர்க்கம்—ஒரு மகத்தான சக்தி, மக்கள் சமுதாயத்திலேயே பெரும் பான்மையோரைக் கொண்ட சக்தி!

இந்த சக்தி, அறிவு மேடையில் அமர்ந்திருப்பது. தட்டினல் விழித்தெழக்கூடியது. எனினும். இன்று உறங்குகிறது—வாழ்க்கைச் சிக்கல்கள் தன்னைப் பிடித்துக் கொண்டு, விடுவதால்!

இந்த நிலையை மாற்றும் மகத்தான பணி புரிய வேண்டியிருக்கிறது. தொழிலாளி—முதலாளிக்கென கூடாரங்கள் உண்டு. ஆனல், மத்திய தர வர்க்கத்துக்கென எதுவும் கிடையாது. இது மாறி, வேதனையால் வாழ்க்கையை நகர்த்தும், இம்மக்கள் கூட்டத்தை இன்பபுரிக்கு இட்டுச் செல்லும் சேவை, இன்று, இந்நாட்டுக்கு மிக மிகத் தேவை—ஒழுங்கான வகையில், நல்ல முறையில்!

❋

விகடரே, விசாரம் வேண்டாம்!

ராஜாஜியைப்போல் எத்தனையோ ராஜாஜி இப்பொழுது தேசத்துக்கு தேவையாயிருக்க, இருக்கிற ஒரு ராஜாஜியையும் இப்படி விலகிக் கொள்ள விடுவது தேசத்துக்கே பெருத்த நஷ்டம்.

ராஜாஜி ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பலாம். அதனால் அவருக்கு லாபந்தான். ஆனால்தேசத்திற்கு அது எத்தகைய நஷ்டமென்பதை யாராவது சிந்தித்துப் பார்த்தார்களா?

வேண்டுமென்றே திறமை வீணாக்கப்படுவதை காண்கிறோம். புத்திசாலித்தனம் புறக்கணிக்கபபடும் இமாலயத்தவறு நடப்பதையேகாண்கிறோம்.

ராஜாஜி தேசத்தின் திறமைசாலிகளுக்கெல்லாம் சிகரமாயிருப்பவர். அவருடைய ராஜதந்திர மேதையும் நிர்வாகத் திறமையும் பிரசித்தி பெற்றவை.

தேசம் தற்போதுள்ள நிலைமையில், தேசத்துக்கே வாழ்நாளை அர்ப்பணம் செய்துள்ள ராஜாஜிக்கு ஓய்வு எடுத்துக்கொள்வது அவ்வளவு சுலபமானதாக இருக்கமுடியாது.

ஆகவே ராஜாஜி தாம் ஓய்வு எடுத்துக்கொள்ள தீர்மானித்திருப்பதாகக் கூறினாரென்றால் அதற்கு வேறுகாரணங்கள் இருக்கவேண்டும்.

* * *

22—1—50 இதழில் 'திறமையொரு குற்றமா?' என்று தலைப்பிட்டு, ஆனந்தவிகடன் தீட்டியிருக்கும் தலையங்கப் பகுதிகள் நாம் மேலே தந்திருப்பவை.

கவர்னர் ஜனரல் பதவிவகித்து, திரும்பிவந்திருக்கும், ஆச்சாரியார் பற்றி, ஆயாசத்துடன் ஆனந்த விகடனார் தீட்டியிருக்கிறார். எவ்வளவு பெரிய மேதை, ராஜதந்திரி, அவருக்கு ஏன் பிரசிடெண்ட்பதவி அளிக்கப்படவில்லையென்று கோபத்துடன் கேட்டுள்ளார்.

தேச நிர்வாகம் சிறப்பாக விளங்க வேண்டுமானால் இவரல்லவோ, இந்நாட்டின் முதல் ஜனாதிபதியாக ஆக்கப்பட்டிருக்கவேண்டும். ஏன், அவர், குடியரசுத்தலைவராகக் கொண்டு வரப்படவில்லை நியாயமா, நேர்மைதானா, நாடு காடாகிக் கொண்டிருக்கும்போது நல்லவரை புறக்கணிக்கலாமா, என்று வேதனையுடன் கேட்டுள்ளார். திறமைசாலிகள் இப்போது நாட்டிற்குத் தேவையென்று தலைவர்களே கூறுகிறார்கள், ஆனால் எந்தத்தலைவரும், இதுபற்றி கவலையோ கஷ்டமோ கொள்ளவில்லை—அது ஏன் என்று ஆத்திரப்பட்டுள்ளார். இதற்கு என்ன காரணம் என்று கேள்வியை எழுப்பி, வேறு காரணங்கள் ஏதோ இருக்கவேண்டும் என்று, விளக்கம்தாமல், முடித்துள்ளார்.

விகடரின் விசாரம், வேதனையோடு வெளிவந்திருக்கிறது. ஆச்சாரியார் இந்தியக் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை—வடநாடு, அவரைப் புறக்கணித்துவிட்டது, 'வீட்டிற்குப் போய் சுகமாக இருங்கள்' என வாழ்த்துப்பா வழங்கி, விமானமேற்றி வழியனுப்பிவிட்டது.

பிரசாத் பீடமேறியுள்ளார்—இல்லை! பீடத்தில் ஏற்றப்பட்டுள்ளார். ஆச்சாரியாருக்கு வந்தனோபசாரம் செய்தனுப்பிவிட்டு ராசேந்திரபிரசாத்தை, குடியரசுத் தலைவராகக் கொண்டுவந்துள்ளனர்—விகடனார் குறிப்பிடும் தலைவர்கள்!

இந்தநிகழ்ச்சி-நடந்தேறிவிட்டது. ஆனால், இதற்குமுன் எத்தனையோ இரகசியவேலைகள், தகராறுகள்,குடுமிபிடிச்சண்டைகள் நடந்தேறியிருக்கின்றன. திரைக்குப்பின்,நடந்துள்ள 'அந்த' இரகசியங்கள் பகிரங்கமாகவில்லை. எனினும் என் ஆச்சாரியார், அனுப்பப்பட்டார் என்பதில் விளக்கமுடியாத நிகழ்ச்சிகள் பல இருக்கத்தான் வேண்டும்.

குடியரசுத்தலைவர் தேர்தல் பற்றி பிரஸ்தாபிக்கபடுகையில் இங்குள்ள நமது தேசியப் பத்திரிகைகளில் மவுண்ட்ரோடு மகாவிஷ்ணுக்களில் 'ராஜாஜி, குடியரசுத் தலைவராகலாம்' என்று செய்திகள் விசேடநிருபர் அனுப்பியதாகப் பிரசுரமாயின. பின், பிரசாத் வரலாம் என்ற உண்மையான செய்தி வெளிவந்ததும் ராஜாஜியின் பெயரும் பிரரேபிக்கப்படலாம் குடியரசுத்தலைவர் பதவிக்குப் போட்டியிருக்கலாம், என்று செய்திகள் வெளிவந்தன.

தீர்மானமாக பிரசாத் குடியரசுத் தலைவராகலாம் என்று செய்தி வெளி வந்ததும் இந்திய மந்திரிசபையில் பதவி வகிக்கும் கோபாலசாமி அய்யங்கார் சந்தானம் அய்யங்கார் முதலியோர் விரைவில் விலகினாலும் விலகலாம் என்று ஒரு செய்தியை பிரசுரித்தனர்— டெல்லி விசேட நிருபர் அனுப்பியதாக! பிரசாத்— தேர்ந்தெடுக்கப் படுவாரேயானால் 'இப்படிச் செய்வோம்' என்று பிரசாத் விரும்பிகளுக்கு எச்சரிக்கை விடுவது போல!

சென்னைக்கு ராஜாஜி, இந்த வேளையின்போது வந்தார். விஷயம் தலைக்குமேலே போய்விட்டது. தனக்கு கடுமையான போட்டி ஏற்பட்டுவிட்டது என்பது அறிந்த அன்பர் ஆச்சாரியார், பெங்களூரில் பேசியபோது, தான் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போவதாக வெளியிட்டார்—வடநாட்டில் அல்ல, அங்ஙனம் குறிப்பிட்டது, தென்னாடு வந்து தென்னாட்டிலிருந்து கொண்டு!

திரைக்குப் பின்—பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகள், வெளியாகவில்லை. எனினும் பத்திரிகைகளின் செய்திநடமாட்

...ளையும் வடநாட்டு இதழ்களில்வந்த செய்திகளையும் பார்க்கும்போது, ஆச்சாரியார் 'கூடாது' என்று ஒரு கோஷ்டியினரும், 'வேண்டும்' என்று இன்னொரு குழுவினரும் 'போராடி' இருக்கின்றனரென்பது, எவருக்கும் விளங்காமற் போகாது. பல வடநாட்டு வாராந்திர இதழ்களில், ஆச்சாரியார்தான் குடியரசுத் தலைமைப் பதவிக்குத் தகுதியானவர்—ராசேந்திரபிரசாத்தோ, டாக்டர் அம்பேத்கரோ, வேறு எவருமோ அந்தப் பதவிக்கு இலாயக்கானவர்கள் அல்ல என்று கட்டுரைகள் காரசாரமாக, ...டந்த சில மாதங்களுக்கு முன் வெளிவந்திருந்தன. இந்தக் கட்டுரை...ளை வெளியிட்ட பத்திரிகைகள் ...வும்—எப்போதும், இந்தியப் ...தமர் நேருவைப் போற்றிப் புகழ்...வனவாகும், துணைப் பிரதமரான ...ட்டேலின் நடவடிக்கைகளைத் ...ற்றி இகழ்வனவாகும்.

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ராசேந்திர ...சாத்தின் பூர்வ இடம் ஐக்கிய ...காணம். ஐக்கிய மாகாணத்தினர் ...ன், முன்பு இந்தி எண்களே ...ருக்கவேண்டும், தற்போது நடை...றையிலிருக்கும் குறிகள் கூடாது ...ன்று கிளர்ச்சி செய்தவர்கள். அக் ...ளர்ச்சியை, நேரு போன்றோர் ...ர்த்ததும், கூடாது என்று கூறிய...ம் எல்லோருக்கும் தெரிந்த ...ஷயமாகும்.

முன்பு காங்கிரஸ் தலைவர் தேர்தல் ...டபெற்ற பொழுதும், பட்டாபி ...ராமய்யாவை எதிர்த்து, போட்டி...ட்டவரும் ஐக்கிய மாகாணத்தைச் ...ர்ந்தவர்தான் என்பதையும் இப் ...து நினைவூட்ட விரும்புகிறோம். ...டாபியின் தேர்தலின்போது, ...தன்னாட்டு மாகாணங்கள்தான் ...வருக்கு வெற்றியளிக்கும் வகை...ல் கட்டுப்பாடாகவிருந்து வோட்டு ...அளித்தன. எனவே, ஒரு ...டு ஏற்பாட்டுடன், ஆச்சாரியார் ...ாது என்று முனைந்து நின்று, ...ற்றிபெற்றிருக்கின்றனர்நேருவை ...ர்ப்பவர்கள்! எப்படியோ, பட...ல்—நேரு மனக்காய்ச்சல், குடி...சுத் தலைவர் தேர்தலில் புகைந்து, ...டித்து ஒரு பக்கம் வெற்றியும் ...இன்னொரு பக்கம் சோர்வும் அளித்...திருக்கின்றன.

'சோர்வை'க் காணவேண்டுமென் ...ல், விமானம் ஏறி ஆச்சாரியார் தன்னாடு புறப்படும்போது, விமான நிலையத்தில் வழியனுப்பப் படுகையில் அவரை வழியனுப்ப வந்திருந்த நேரு, கோபாலசாமி அய்யங்கார் ஆகியோரது படங்களை "மெயில்" பத்திரிகை பிரசுரம் செய்துள்ளது. அதைக் கண்டால் போதும்! அவைகளைக் கண்ணுறும்பொழுது, அவர்கள் முகங்கள், எதையோ இழந்தவர்களைப் போல, உண்ணக் கிடைத்த உணவைப் பறிகொடுத்த வரைப் போல, காட்சியளிக்கின்றன வேதனையும் — வெட்கமும், சோகமும்—சோர்வும் கலந்து!

குடியரசுத் தலைவர் தேர்தலில் 'திரைக்குப்பின்' பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன—இதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, முடியாது. இந்த நிகழ்ச்சிகளின் எதிரொலியைத்தான், விகடனார் 'திறமை ஒரு குற்றமா?' என்று கேட்டு, 'ஜன நாயகத்தில் திறமைசாலிகளுக்கே இடமிருக்காதோ' என்ற முகாரியுடன் முடித்திருக்கின்றார்.

ராஜாஜி—ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடியவரா, நாட்டு வாழ்வில் எவ்வளவு அக்கரையும் ஆவலும் கொண்டவர், அவரே 'நான் ஓய்வு எடுத்துக் கொள்வதில் உங்களுக்கு இஷ்டமில்லையா?' என்று கேட்கும்படி ஏற்பட்ட தென்றால், அதற்கு வேறு ஏதோ காரணங்கள் இருக்கத் தான்வேண்டும்—என்கிறார் விகடன் தலையங்கத்தார்.

உண்மைதான், வெளிப்படையாக உரைக்கும் அளவுக்கு நெஞ்சில் துணிவும், குட்டு வெளிப்படுமே என்றசஞ்சலமும் காங்கிரஸின் காட்சியை நாமே சந்திக்குக் கொண்டு வருவதா என்ற கஷ்டமனோபாவமும், உள்ளத்தில் உதைத்துக்கொள்வதால், 'ஏதோ காரணங்கள் இருக்க வேண்டும்' என்று பூசி, மெழுகி, மறைக்க முயற்சித்துள்ளார். எனினும், அவர்கள் கூடாரத்திலே நிலவும் அதிருப்தியும் அவலமும் அவரது எழுத்துக்களிலே எதிரொலிக்கின்றன.

ஆச்சாரியார், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லையே என்றதும், தேசிய ஏடான, விகடனின் இதயத்திலே விசாரம் ஏற்பட்டு தேசியத் தலைவர்களின் போக்கில் தவறும், தவரான மனப் போக்கும் தாண்டவமாடுவதாகக் கூறும் அளவுக்குக் கொண்டு விட்டிருக்கிறது.

வேதனைக் கண்ணீர் சிந்தும் விகடன், ஆச்சாரியார் குடியரசுத் தலைவராக ஆக்கப்படாததற்காக வேதனைப்படும் விகடன் தலையங்கத்தார், தென்னாட்டைச் சேர்ந்த ஆர். கே. ஷண்முகம் மத்திய சர்க்காரில் வகித்த நிதி மந்திரி பதவியிலிருந்து விலகும்படி செய்யப்பட்ட பொழுது, கவலைக்குறியோ, கஷ்ட விளக்கமோ காட்டாதவர்.

திறமை ஒரு குற்றமா — என்று கேட்காதவர். அது ஏன்—என்று நாம் அவரைக் கேட்க விரும்பவில்லை, இன்றைய ஆளவந்தாரின் செயல்களெல்லாம், 'ஒரு திருவிளையாடற் புராணம்' என்று கருதுகிற காரணத்தால்!

அப்போது, ஆர். கே. எஸ். விலகல் பற்றிக் காரணமும் கேட்க விரும்பாத விகடனார், இப்போது கண்ணீரும் கம்பலையுமாய்க் கேட்கிறார், திறமைசாலிக்கு இடமில்லையா என்ற சஞ்சலத்துடன்.

வேதனை இடிக்க, இதயம் குமுற, சந்தேகம் மின்னி எழும்ப, ஆச்சாரியாரை தேர்ந்தெடுத்திருக்க வேண்டும், அவரைத் தேர்ந்தெடுக்காததால் நாட்டிற்கு எவ்வளவு கேடு என்பதை விளக்கி அவர் காட்டியுள்ள காரணங்கள், 'விகடமாக' இருக்கின்றன நமக்கு, வேடிக்கையாக யிருக்கின்றன.

நாடு, நெருக்கடியில் அகப்பட்டு விழிக்கிறது.

திறமைசாலிகள் தேவையென்று தலைவர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் ராஜாஜி புறக்கணிக்கப்படும் இமாலயத் தவறு நடந்திருக்கிறது.

ராஜாஜி திறமைசாலிகளின் சிகரம், ராஜதந்திர மேதை, நிர்வாகப் புலி.

(11-ம் பக்கம் பார்க்க)

நாம் ஆதியிலிருந்தபடியே இருக்கிறோம். மாறவே இல்லை என்று கருதுவது வீண்பிரமையாகும். மாறுவிடில் அழிவாய் என்பது இயற்கையின் கட்டளை.

R. R. திவாகர்

* படிப்பகம் *

"திராவிடன்" பொங்கல் மலர்

வழக்கம்போல சிறந்த முறையில், இவ்வாண்டு மலரும் வெளியிடப் பட்டிருக்கிறது. கதைகள், கட்டுரைகள், வரலாறுகள், மலரில் நிரம்பியுள்ளன. நம் நாட்டின் பழம் பெரும் தலைவர்கள் மறைந்த இயக்க மாவீரர்கள் முன்னேற்றக் கழக செயல்வீரர்கள், எழுத்தாள நண்பர்கள், மாநாட்டுத் தலைவர்கள் படங்கள் மலரின் தனிச்சிறப்பு. இடைவிடா அலுவல்களினூடே, இத்தகைய சிறந்த மலரைக் கொண்டுவந்த தோழர் என். வி. நடராசன் அவர்களின் முயற்சி மிக, மிகப் பாராட்டற்குரியது.

எதிர்காலத்தில், இயக்க வரலாற்றின், பொன்னேடுகள், இதுபோன்ற மலர்கள். எனவே, ஒவ்வொரு தோழர்கள் கையிலும் இருக்குமென்றே நம்புகிறோம்.

விலை ரூ. 1

முகவரி:— திராவிடன் 18, பெருமாள் முதலி தெரு, ஜி. டி. சென்னை.

* * *

"பொன்னி" பொங்கல் மலர்

கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியங்கள்! கருத்தைக் கிளறும் சித்திரப் படங்கள்! கழக முன்னணி வீரர்களின் உருவப் படங்கள்! உயிரோவியங்கள் என 'கண்வலை' போட்டிழுக்கும் காவிய ஓவியங்கள்! ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள், கதைகள்! நகைச்சுவையூட்டும் துண்டுப் படங்கள்!

"பொன்னி"யில் புகுந்ததும் ஓரே ஆச்சரியமயமாக யிருக்கிறது. ஆமாம்! போதிய இயந்திர சாதனம், எண்ணியதும் முடிக்கக்கூடிய வசதிகள் இல்லாமை ஆகியவைகளினூடே மலரை இவ்வளவு சிறப்பாக எப்படிக் கொண்டுவந்தார்கள் — அதுவும் 'ஆர்ட்' காகிதத்தில் என்பதால்!

நாகரீக வசதிகள் நிரம்பிய சென்னைக்கு வெளியிலிருந்து, சாதாரண பத்திரிகை நடத்துவதென்பதே முள் நிரம்பிய ரோஜாவைப் பறிப்பதுபோல, காட்டுப் பாதையில் ககன மாளிகையை நிர்மாணிப்பது போல!

இங்கிலையில் வண்ணப் படங்களுடன் நெஞ்சை யிழுக்கும் நினைவுச் சித்திரங்களுடன் கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொள்ளும் வகையில 'மலர்' தந்து, திராவிடத்தில் 'மணம்' எழுப்பியுள்ளார்கள் பொன்னி நிர்வாகிகள்.

பணபலமும் வசதியும் நிறைந்த, "சிலரால்"தான், இதுபோன்ற மலர்களும், பத்திரிகையும் வெளியிட முடியும் என்றிருந்த நிலையைமாற்றி, 'எங்கள் கழகத்தாராலும்—இருக்கின்ற வசதிகளை மட்டும் வைத்துக் கொண்டு செய்ய முடியும் திறமையோடு' என்று செயலால் தமிழகத்துக்கு நிரூபித்தவர்கள் தோழர்கள். முருகு. சுப்பிரமணியமும், பெரியண்ணனும், பொன்னி அலுவலகத்தாரும்!

அவர்களுடைய வெற்றிப் பாதையின் இன்னொரு மைல்கல் இவ்வாண்டு மலர்!

விலை ரூ. 3—12—0

முகவரி:— 'பொன்னி' அலுவலகம் புதுக்கோட்டை.

• • •

மனோதத்வமும் குடும்ப வாழ்க்கையும்

ஆசிரியர்:— சத்திய சாமுவேல், பி. ஏ., எல். டி.

வாழ்க்கை—கரடு முரடான மலைப் பாதை. அதை நடந்து செல்ல அனுபவம், அறிவு, நிரம்பிய மனநிலை எழும்பவேண்டும். பிறருடைய ம நிலை அறிந்து வாழ மனிதன் கற்று கொண்டால், அவன் வாழ்க்கையி வெற்றியும், சுகமும் மலரும்.

இந்த எண்ணத்தின் அடிப்பன யில், ஆண்—பெண் மனோதத்வ உண்மை மண வாழ்க்கை, இல்ல இன்பம், ஆகியவைகள் பற்றிய அ வுரைகளுடன், இந்நூல் விளங் கின்றது.

கருத்து நிரம்பிய நூல் இது புது முயற்சி. எல்லோரும் வாங்கவேற் வேண்டிய ஒன்று!

விலை ரூ. 1—12—0

பெறும் இடம்:—டயோஸிஸன் புத்தக டெபோ. பாளைய கோட்டை.

* * *

ஆயர் வாழ்வு

ஆசிரியர்:— மதுரை இ. இரா. ரேங்கசாமி

கண்ணுச்சாமியும் விஜயாவு காதல் புறாக்கள். செல்வச் செருக் என்ற பருந்து முத்துக் கோ உருவில் அவர்களை விரட்டுகிறத முடிவு, சோகம் நிரம்பியதாகிறத

நாட்டில் நடைபெறும் கேடுபா களை இந்நூல் சித்தரிப்பதோ சமுதாயத்தில் ஆயர்குல ம ளிடையே நிலவும் வேதனை நிலையு படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

'எழுச்சி பெற இன்று எண்ண கண்ணுச்சாமிகள் தேவை—கல்லு சாமிகளல்ல' என்று கூறுகிறா இந்நூலாசிரியர். முன்னேற்ற கோ கமும், சமுதாய வாழ்விலுள் அக்கறையும் அவரது எழுத்து களில் உருண்டு வருகின்றன உணர்ச்சி மயமான இந்நூல் கரு துக்கு விருந்து.

விலை அணா. 8

பெறும் இடம்:— யாதவன் பிர ராலயம், சென்னை-5.

'படிப்பகம்'—மாதா மாதம் கடை வார இதழில், ஒரு பக்கம் வெ வருவதாகும். எனவே, கைக்குவர் எல்லா நூல்களும் ஒரே சமயத்தி இடம்பெறுவது இயலவில்லை. தய செய்து பொறுத்தருள்க!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press. 95, Tirukkachinambi Street. Kancheepuram.